# சிரித்திரன்

சர்ப்பங்களுடன் சாதனை




SIRITHITAN ஜூலை—1980

விலை 1-35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழலினிது யாழினிது என்பர்
தாம்விரும்பும் இசையை
'றேடியோஸ் பதி'யில் ஒலிப்பதிவு செய்தோர்

ஒலிப்பதிவுத் துறையில் யாழ்நகரில்
முன்னணி வகிக்கும் ஸ்தாபனம்

றேடியோஸ்பதி

மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள், வானொலிப்பெட்டிகள், ரேப்ரெக்கோடர்கள்
தொலைக்காட்சிப் பெட்டிகள்... அனைத்தையும்

- புதிதாக வாங்கவும்
- திருத்தம் செய்யவும்... உங்கள் ஞாபகத்தில் 'பதி'வாகி இருக்கவேண்டிய பெயர்.

58, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

தொலைபேசி; 7805.

radios pathy

கொழும்பு - மலையகம்
பகுதிகளைச் சேர்ந்த—

- சஞ்சிகை விற்பனையாளர்களும்
- இலக்கிய நண்பர்களும்

சிரித்திரன்
சம்மந்தமான சகல தொடர்புகளையும் கீழ்க்கண்ட முகவரியுடன் வைத்துக்கொள்ளவும்.

செல்வம்

- கதிரேசன் வீதி,
- கொழும்பு 13

தரமே எமது தாரக மந்திரம்

புகைப்படம்
புளொக்ஸ்
போட்டோஸ்ரற்

குறிப்பிட்ட தேதிக்கு
உங்கள் ஓடர்கள்
செய்துதரப்படும்.

சித்ராலயா

தொலைபேசி 522

ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரன்

செய்தொழிலே தெய்வம்
சிரிப்பே சீவியம்

நகை 18 ஆடி 1980 சுவை 7


## சஞ்சிகை சமாச்சாரம்

யாழ்தேவி ரதம் தண்டவாளத்தில்யாழ்ப்பாணத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. நான் இருந்த கொம்பாட்மெண்டில் உள்ளவர்களின் கண்கள் சஞ்சிலைகளின் வரிகளில் ஓடிக்கொண்டிருக்கின்றன. திடீரென ஒருவாசகரின் கண்ணோட்டம் பிறேக் போட்டு பெருமூச்சுடன் நின்றது நான் அவரை விழிபிதுங்கப்பார்த்தேன். அவர் மனம் வெதும்பியவராய், என்னைப்பார்த்து. "நான் இப்போ நோன்பு அனுஷ்டிக்கும் நாட்கள். இந்நாட்களிலா பஞ்சமா பாதகம் நிறைந்த சஞ்சிகை வாங்கினேன் வாசிப்பதற்கு மகாத்மா காந்தி ஆபாசமான கனவு காண நேர்ந்ததால் தன்னைத் தண்டிப்பதற்காக உண்ணாவிரதம் இருந்தாராம். நான் நோன்பு காலம் இப்படி ஒரு அபச்சாரச் சஞ்சிகையை வாங்கினேன்" எனக்கவலைப்பட்டார்.

இன்னுமொருவர் தான் வாசித்த சஞ்சிகையை மூடிவிட்டு' இன்று வாசன், கல்கி, தி. ஜ. ரா உயிர் பெற்றுவந்து எமது சஞ்சிகைகளை வாசிக்க நேர்ந்தால் மறுபடியும் மாரடைப்பால் உயிர் பிரிந்து விடுவார்கள் எனக்கூறினர்.

எமது விசனத்தையெல்லாம் மூலையில் இருந்து அவதானித்த பண்டிதர் ஒருவர் தனது விமர்சனத்தையும் கூறத்தவறவில்லை.

மகாபாரதத்தில் ஒருபடலம் மட்டும்தான் துகில் உரியும் படலம்எமதுமாசிகைகளில் பக்கமெல்லாம் துகிலுரியும் படலங்கள் என்றர். இந்தசந்தர்ப்பத்தில் வாசகநேயர் கேள்விக்கு மகுடியார் அளித்த பதில் ஞாபகம் வந்தது. "பத்திரிகையின் விற்பனையை உயர்த்துவதற்காக பெண்களின் நிர்வாணப்படங்களைப் பிரசுரிக்கும் பத்திரிகையாளர் பற்றி உமது கருத்து என்ன" என்ற கேள்விக்கு மகுடியார் "அது அவர்களின்மூளையின் நிர்வாணத்



தைக்காட்டுகிறது" என அழுத்தம்திருத்தமாகப்பதில் கூறியிருந்தார்.

அண்மையில் யாருடனே பத்திரிகை விற்பனைபற்றிப் பேசிக்கொண்டு இருக்கும்போது அவர் கூறிய கருத்தும் என்னைச் சிந்திக்கச் செய்தது. ஆங்கில தினப்பத்திரிகைகள் தமது விற்பனையை உயர்த்துவதற்காக ஜிக்ஸ், பிளெண்டி அண்டி காப் போன்ற நகைச்சுவைச் சித்திரங்கள் வருகின்றனவே. அவையெல்லாம் பண்புதவறுப் படைப்புகளல்லவா எனக் கூறினர்.

வள்ளுவனுக்கும், கம்பனுக்கும், பாரதிக்கும் விழா எடுக்கும் நம்மவர் சிறுவர்களைப் பற்றிச்சிந்திப்பதில்லை. சிறுவர்களுக்காகிய போதிய புத்தகங்கள் இல்லாதபடியால் அவர்களும் புஷ்பா தங்கத்துரை, சுஜாத்தா அவர்களின் புத்தகங்களை மேய்கின்றனர் இந்த நிலைமாற இலக்கிய ஜாம்பவான்கள் விழித்திருந்து செயலாற்ற வேண்டும்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்று எழுத்தை கண்ணாகவும் தெய்வீகமாகவும் மதிப்பவர் நாம். நாம் ஞானக் குருடராகக் கூடாது என்பதே எனது பிரார்த்தனை.

மயில்வாகனத்தார்

---

- தவறான மனிதர்களின் சுகமான வாழ்க்கை எந்தக் காவத்திலும் வரலாறான தில்லை.

—கண்ணதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரன்

## சிறுகதைப்போட்டி

- சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ஆண்டுதோறும் சிரித்திரன் சிறுகதைப்போட்டிகள் நடாத்தி வருவது அனைவரும் அறிந்ததே.
- இவ்வாண்டுக்குரிய 'சிறுகதைப் போட்டி' பற்றிய அறிவித்தலை அறியத்தருவதில் சிரித்திரன் மகிழ்ச்சியடைகிறான்.

### விதிகள்

☐ எவரும் பங்கு பற்றலாம் வயதுக் கட்டுப்பாடில்லை.

☐ போட்டிக்கு அனுப்பும் கதைகள் சிரித்திரனில் 5 பக்கங்களுக்கு மேல் போகாதிருத்தல் அவசியம்.

☐ முதற்பரிசுபெறும் மகுடக் கதைக்கு

**30 ரூபாவும்**

இரண்டாம் -மூன்றும் பரிசுக்குரிய கதை அமுதங்களுக்கு முறையே ரூ. 20 ரூ. 15

பாராட்டுப்பெறும் நான்கு கதைகளுக்கும்தலா 10/-ரூபாவும் பரிசிலாக வழங்கப்படும்

☐ போட்டிமுடிவு திகதி
20-8-1980

☐ ஆசிரியரின் தீர்ப்பே இறுதி முடிவு.

☐ கதைகள் யாவும்
சிறுகதைப் போட்டி
சிரித்திரன்
559, K. K. S. வீதி
யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

●



கலைச்செல்வி யாழ்ப்பாணம்

கே: கலைஞன் எப்படிப்பட்டவன்

ப: அவன் Mood ஆழ்.

● ☐

தமிழரசன் காங்கேசன் துறை

கே; தமிழனின் இன்றைய நிலை என்ன?

ப; புதுமை சாதிக்காததால் பழமையும் இல்லாமல் போகும் நிலை.

● ☐

கி. ஏ. தம்பு கைற்ஸ்

கே: குறுக்கு வழியால் செல்வந்தனானவனுக்கும் நேர்வழியால் ஏழையானவனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

ப: இருவரிடமும் தனமுண்டு ஒருவரிடம் அயோக்கியத் தனமுண்டு. மற்றவரிடம் யோக்கியத்தனமுண்டு.

★ ● ☐

ஏ. லிங்கப்பா பஜார்வீதி பதுளை

கே: அசிங்கமானது எது?

ப: ஊரும் அட்டையல்ல, சஞ்சிகையின் அட்டை.

● ☐

தெய்வேந்திரன் பரந்தன்

கே: வேலைக்காரனை தீயால் சுடுபவர்கள் பற்றி உமது கருத்து என்ன?

ப: அவிவேக பூரணகுருவின் சீடர். வேலைக்காரன் விழிப்பா தூக்கமா என சோதனை செய்து பார்ப்பவர்கள்.

தமிழினியன் காங்கேசன் துறை

கே; நாணயம் இல்லாதவனுக்கும் நாணயத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப; நாணயத்திற்கு தலையுமுண்டு பூவுமுண்டு.

● ☐

எஸ். மங்களதேவி பாணந்துறை

கே; எவன் சிறந்த வில்லன்

ப: பணமுடிச்சுக்காகத் திருமணம் செய்துவிட்டு உன்மூக்கிற்காக மணம் செய்தேன் என்று 'டைலக்' பேசிறுனே... அவன்.

● ☐

செல்வேந்திரகுமார் வத்தளை

கே: உலகில் உள்ள அயோக்கியத்தனம், அநியாயம், அடாத்துகளைப் பார்க்கும்போது உம் மனதில் என்ன தோன்றுகின்றது.

ப: மனிதன் துப்பாக்கியால் மேய்க்கப்படவேண்டிய மிருகமென நினைக்கத் தோன்றுகின்றது.

● ☐

தம்பிமுத்து மூதூர்

கே: ஒருவன் நல்லவனா கெட்டவனா என்று அறிவதற்கு என்ன செய்யவேண்டும்?

ப: அவன் வீட்டில் வாடகைக்கு இருந்துபார் அல்லது அவன் வீட்டில் திருமணம் செய்து பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்தநாதன் வவுனியா

கே: தலையில்லா அரசியல்வாதியால் நாட்டிலுள்ள இருளைப் போக்கமுடியுமா?

ப: தலையில்லாத் திக்குச்சியால் ஒளிதரமுடியாதே.

● □

எழிலரசி திருகோணமலை

கே: நாமின்று செயற்கை உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் அப்படித்தானே?

ப: ஆம் மழை செயற்கை உரம் செயற்கை... எல்லாம் செயற்கை... இயற்கை இயற்கை எய்திவிட்டது.

● □

இதயகுமாரன் தெல்லிப்பளை

கே: இதயத்தால் அந்நியநாட்டுப் பொருட்களை நேசித்துக்கொண்டு தேசியம் பேசுவோர் பற்றி உமது கருத்து?

ப: பேசுவது மண்வாசனை பூசுவது பாரீஸ் வாசனை.

● □

கலாமேகநாயகி நாவலர்வீதி

கே; எமது வாலிபர்பற்றி உமது கருத்து?

ப: நெப்போலியன் நாட்டிலும் வாழத்தெரிந்த நெப்போலியன்கள்.

● □

தம்புசாமி எழுவைதீவு

கே; ஏழைக்கு பகல் பிடிக்குமா இரவு பிடிக்குமா?

ப; உடையில்லா ஏழைக்கு இருள் மானங்காக்கும் ஆடையல்லவா.

● □

நிர்மலாதேவி அளவெட்டி

கே: கல்விக்கு மதிப்பு இல்லாவிட்டால்?

ப: கற்றவன் கணக்கெழுதுவான் கல்லாதவன் காசோலை எழுதுவான்.

கமலவேணி புலோலி

கே: பெண்ணின் நகைக்காக திருமணம் செய்பவன் பற்றி உமது கருத்து?

ப: பெண்ணின் புன்னகைக்காகத் திருமணம் செய்பவன் காதலன்... பெண்ணின் பொன் நகைக்காகத் திருமணம் செய்பவன் திருடன்

● □

சூசைப்பிள்ளை மன்னார்

கே; கிராமத்து ஏழைக்கும் நகரத்து ஏழைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

ப: இருவருக்கும் நீர்தான் ஆகாரம்... அது அவர்களின் ஒற்றுமை. கிராமத்தவர் வயிற்றை நிரப்புவது கிணற்று நீரால் நகரத்தவர் நிரப்புவது குளாய் நீரால், அது அவர்கள் வேற்றுமை.

● □

கஜேந்திரகுமாரன் வல்வெட்டி

கே; எழுத்தாலும் மேடைப்பேச்சாலும் புரட்சி செய்யவிரும்புவோர் பற்றி உமது கருத்து?

ப: புழுதிபடாப் புரட்சி வீரர்

● □

★

க. நாதன் திருகோணமலை

கே; தெய்வபக்தி உள்ள நாடுகள் முன்னேறுகின்றனவா?

ப; நேரத்தை தெய்வமாக மதிக்கும் நாடுகள் முன்னேறுகின்றன.

● □

எம். ஏ. நசுமா புத்தளம்

கே: அவலட்சணமானது எது?

ப: துணிவு இல்லாதவன் மேல் துணி.

★ இக்கேள்வி ரூபா 10 பரிசை பெறுகிறது.

# இந்தியாவின் சஞ்'சேய்'



இந்திய சுதந்திரத்தைப் பற்றி ஒரு கவிஞன் பாடினன்
'இரவில் வாங்கினோம்
இன்று விடியவே இல்லை'
என்று எனினும் உன்
இளம் நெஞ்சின் உரம்மிக்கசெயற்திறனில் ஒரு-
நம்பிக்கை நட்சத்திரம் உதயமாக ஆரம்பித்தது.
உதயகாலப் பிரகாசத்தை பேதாங்கிக்கொள்ள முடியாது கண்களை மூடி - முகத்தைச் சுளித்த அரசியல் அவிவேக பூரணகுமார்களின் அவதூறுகளை வைரமாலையாக்கி சூடிக்கொள்ளும் வைராக்கியம் உன்னிடமிருந்தது.

இந்தியத்தாய் தன் கனவுகளை நனவாக்கும் சிற்பி'யாக உன்னை நினைத்திருக்கும் வேளையில்...


உன்பிரிவால்
கங்கைநதி நிரந்தரமாக
வற்றிவிட்ட துயரம் நெஞ்சையடைக்கிறதே...

நீ...
இந்திராவின் 'சேய்' மட்டுமல்ல
இந்தியாவின் சஞ்'சேயு'மல்லவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி



- சரியான விடைதரும் அதிர்ஷ்டசாலிக்கு முதலாவது பரிசாக ஒரு வருட சிரித்திரன் அன்பளிக்கப்படும்.
- இரண்டாவது பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிக்கு அரை வருட சிரித்திரன் அன்பளிக்கப்படும்.
- விடைகள் யாவும் 20-7-80க்கு முன்பு 'குறுக்கெழுத்துப் போட்டி' ஆசிரியர் சிரித்திரன் 559, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கு கூப்பனிலேயே நிரப்பி அனுப்பி வைக்கவும்.

ஆ...ர்

## மேலிருந்து கீழ்:

1. ஒருவகை நடனம்
3. பாண்டியன் ஆணைப்படி சிவபெருமானின் முதுகில் பிரம்பால் அடித்த அதிகாரி.
5. வாழ்வில் உள்ள இருப்பத்தை உண்டு பண்ணும் ஒரு நிகழ்ச்சி.
6. சத்தத்தின் மறுபெயர் இங்கு குளம்பியுள்ளது.
16. இராமபிரானின் உடன் பிறவாத்தம்பி இங்கு தலைகீழாக உள்ளார்.
43. திருஞான சம்பந்தரின் முதல் தேவாரம் இந்த அணிகலனில் இருந்தே ஆரம்பமாகிறது.
46. வேகத்தின் மறுபெயர் இங்கு தலைகீழாக உள்ளது
47. தடாகத்தை இப்படியும் அழைக்கலாம்
48. இது உள்ள வைத்தியர்களே பெயர் பெறுகின்றனர்
52. இதன் சேட்டைகள் இப்பொழுதும் நடைபெறுகின்றதாமே. பயமாக இருக்கிறதா?

## இடமிருந்து வலம்

1. பாரதப்போர் நடைபெற்ற இடம்.
13. மழைக்கு இவனே கடவுள் என இந்துசமயம் கூறுகிறது. இங்கு குளம்பியுள்ளது.
17. இது இருந்தால்தானே சித்திரம் வரையலாம். குளம்பியுள்ளது.
29. தெய்வப் பெண்களை இப்படியும் கூறுவர். இங்கு குளம்பியுள்ளது.
33. பெண்புத்தி — புத்தி என்று இன்றும் கூறுவர்.
36. ஓம் நமசிவாயம்
41. ஒரு தொழிலின் பெயர் இங்கு குழம்பியுள்ளது.
46. தமிழ் பிறந்த மலை இங்கு குழம்பியுள்ளது.
51. வேள்விகளில் பலியிடப்படும் மிருகம் இங்குமாறியுள்ளது.
57. முல்லைக்கொடிக்கு பாரி கொடுத்தகொடை
60. இப்பிறவியில் அனுபவிப்பது ஊழ்—பயன் என்பர் இங்கு குழம்பியுள்ளது.
63. இதில்தான் எத்தனை அலங்காரம்

### சென்ற போட்டி முடிவுகள்

| 1-ம் பரிசு | 2-ம் பரிசு |
|---|---|
| **பூமதி அரவிந்தன்** | **பா. கிருஸ்ணகுமார்** |
| 9, மருதடி வீம் | 10-B வகுப்பு |
| நல்லூர் | அமெரிக்கன் மிஷன் கல்லூரி |
| யாழ்ப்பாணம். | உடுப்பிட்டி |

### பாராட்டு பெறும் அதிர்ஷ்ட சாலிகள்

1. கே. அரசேஸ்வரன் நல்லூர் வடக்கு
2. பா. வளர்விழி அளவெட்டி
3. ஏ. கே. கணேசலிங்கம் எழுவைதீவு.
4. வ. சண்முகம் பரந்தன்
5. இந்திரா ஜெய்பிரகாசம் வவுனியா
6. பி. அஞ்சுலா மோசி யாழ்.
7. செ. சூசையை குருநகர்
8. க. இதயகுமார் சாவகச்சேரி
9. எம். எம். ஏ. றசிக் சாமாந்துறை

### குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள்

இடமிருந்து வலம்:

1. பாரதிதாசன் 11. யாகசாலை 19 தனம்(ன) 25. மனம் 29. திலகம் 38. கமம் 41. இல்லறம் 47. மாசி 49. பாரம் 60. பாண்டியன்

மேலிருந்து கீழ்

1. பாராளுமன்றம் 3. தியானம் 4. தாகம் 5. சாசனம் 6. தலைமகன் 8. யாழ் 31. சிலம்(பு) 32. அதிகமான் 36. பல 42. இரவு 43, பால் 54, ஆடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத்தோட்டம்

**கங்குலன்**

பிரபல தேயிலைத்தோட்ட மொன்றின் தோட்ட உத்தியோகத்தரான 'கிளார்க்கர்' பங்களா.

பங்களாவின் முன்வராந்தாவில் கொழும்பிலிருந்து லீவில் வந்திருக்கும் கிளார்க்கரின் மகன், கையில் 'ஈவ்ஸ் வீக்லி'யை புரட்டிக் கொண்டிருக்கிறான்.

தோட்டத்து லயன்களை கூட்டிப்பெருக்கும் 'வாசற் கூட்டி' சடையன் பங்களாவிற்கு வந்து, "அம்மா இருக்காங்களா" என்றான்.

"யாருடா நீ... வீட்டு வாசற்படியில நின்னுகிட்டு கீழே இறங்கி நில்லு" என்றான் கிளார்கர் மகன்.

வீட்டினுள்ளேயிருந்து வந்த கிளார்க்கர் 'அம்மா' லயத்தை யெல்லாம் கூட்டிபுட்டுதான் பங்களாவுக்கு வரணுமோ? மொதல்ல இங்க வந்துட்டு அப்புறம் லயத்துக்குப் போகப்படாதோ. என்றாள்.

"யாரம்மா இது நாயெல்லாம் பங்களாவுக்கு வருது என்றான் மகன்.

'நா இன்னிக்கு வேலைக்கு வரலீங்க... ஏஞ்சம்சாரத்துக்கு சரியான நெஞ்சுவருத்தங்க... ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகணுங்க... ஐயாகிட்ட சொல்லி லொறில கொண்டுபோக கேக்க வந்தேங்க...' என்றான் சடையன்.

'ஒங்க வீட்டு வேலைய கவனிக்கத்தான் லொறி வச்சிருக்கோ - மொதல்ல பங்களாவை நல்லா கூட்டி துப்பரவு பண்ணீட்டு அப்புறம் போ... ஆஸ்பத்திரிக்கு... என்றான் மகன்.

'அய்யா மகன் சொல்வதை தட்டிக்கழித்தால் வேலை நிறுத்திவிடுவார்கள்" என்ற பயத்தில் தன் இனத்துக்கே உரிய பொறுமையுடன் பங்களாவை துப்பரவு செய்துவிடுகிறான் சடையன்.

பங்களாவுக்குப் போனவன் திரும்பி வராததால் அவன் மனைவியை 'காரில்' கொண்டுபோயிருந்தார்கள் லயத்திலுள்ளவர்கள்.

கொழும்பு கிருண்ட்பாஸ் வீதியில் ஒரு சிறிய ஒழுங்கை. ஒழுங்கையின் உள்ளே இருபது குட்டி, குட்டி வீடுகள். இருபது வீடுகளிலும் குஞ்சும் குறுவான்களுமாக கிட்டத்தட்ட இருநூறு இருக்கும்.

எல்லாருக்கும் பொதுவான இரண்டு மலசலகூடங்கள் ஒரு தண்ணீர் 'பைப்'. அதுவும் ரேசன்படி!

அதற்கு ஒழுங்கை என்று கொழும்பில் சொல்வதில்லை. அதுவும் ஒரு 'தோட்டம்'.

தேயிலை தோட்ட லயன்களை பழிப்பவர்கள் இதைக் கண்டால்தான் லயன்களின் அருமையை நினைத்து பெருமை கொள்வார்கள்.

அதே கொழும்பு தோட்டத்தில்தான் சடையனின் அண்ணன் மகன், பத்து வருடங்களுக்கு முன்னரே கொழும்பு வந்து 'டெயிலர்' வேலைபழகி அந்த வருமானத்தில் வாடகைக்கு ஒருவீடு எடுத்து சமீபத்தில் அதை சொந்தமாக்கிக் கொண்டான்.

பிரஜாவுரிமைக்கு மனுப்போட்டிருந்தசடையனுக்கு விசாரணைக்கு வரும்படி கடிதம் வந்திருந்ததால், சடையன் குடும்பம் சகிதமாய் கொழும்புக்கு வந்திருந்தான்.

தோட்டத்து கிளார்க்கர் மகன் கொழும்பில் ஒரு கம்பனியில் 'கிளார்க்'வேலை. சமீபத்தில் திருமணம் முடித்து — அலையா அலைந்து மிகவும் சிரமப்பட்டு அந்த கொழும்பு தோட்டத்தில் நிறைய 'கீ மணி' கொடுத்து வாடகைக்கு ஒரு வீடு எடுத்திருந்தான்.

தேயிலை தோட்டத்தில் போல் இரண்டு பேருக்கு பத்து அறைகள் கொண்ட பங்களாவோ — அங்கு நடத்தும் அடத்தனமான அதிகாரமோ இல்லை.

சிறிய வீட்டின் ஒன்றிரண்டு அறைக்குள் படுக்கையறை, விருந்தா. குசினி, பூஜையறை என பிரித்து திரைபோட்டு இருந்தன.

அடுத்த வீட்டில் என்ன நடக்கிறது என்று தெரியாமல் வாழ்ந்து கொண்டிருந்தான் அவன்,

பிரஜாவுரிமை விசாரணைக்கு வந்த சடையன் தற்செயலாக கிளார்க்கர் மகனை தண்ணீர்க்காக பைப்படியில் 'கியூ'வில் நிற்பதைக் கண்டுவிட்டான்.

நாய்கள் மத்தியில் மனிதன் உலாவுவது எப்படி? என்று கேட்க நினைத்தவன் மனிதனின் ஆட்டம், அதிகாரம் எல்லாம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்தான் என கிளார்க்கர் மகன் உணர்ந்தால் சரி' என இருந்துவிட்டான்.

யார் என்ன தொழில் செய்தால் என்ன எல்லாரும் மனித இனம் என்பதை குறுகிய காலத்தில் தன் அனுபவ வாயிலாக உணர்ந்திருந்தான் கிளார்க்கர் மகன்.

தானும் கொழும்பில் ஒரு தோட்டத்தில்தான் வாழ்கிறேன் என்பதை உணர்ந்த அவன் இப்போதெல்லாம் தேயிலை தோட்டத்துக்கு போகும்போது தன் அகங்காரத்தை மூட்டைகட்டி வைத்தான்.

---




● உங்க மகனுக்கு கலப்படமென்றால் பிடிக்காது.

☐ யாருக்குத்தான் கலப்படம் பிடிக்கும்.

சுத்தமான சாராயம் குடிப்பவர்: சோடா கலப்பது அறவே பிடிக்காது:



# சீனிப் பலகாரம்



● சீனி விலை ஏறினால் இவன் ஏன் விறைப்பாக நடக்கிறான்


□ அவன் பெயர் சீனித்தம்பியாம்.

★ ★

● என்னப்பா சர்வர் ஒரு கப் டீ விலை ஒன்றரை ரூபாயா?

□ சீனி விலை கூடியிருக்கிறதே, தெரியாதா?

● சரிதான் ஒரு இறாத்தல் சீனிக்குக் கூடிய விலையை நீங்கள் ஒரு கப் டீக்கே கூட்டிவிட்டீர்கள்.



● இந்தாருங்கள் கப் டீ

□ தயவுசெய்து ஒரு பூதக்கண்ணாடி தரமுடியுமா? கப் எங்கேயிருக்கிறது என்று பார்ப்பதற்கு.

● வேண்டாம் ஐயா, பிறகு அதனுள் இருக்கும் டீயைப்பார்க்கஇன்னொரு பூதக்கண்ணாடி கேட்பீர்கள்.



● சீனி விலையைக் கூட்டியதற்காகப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள்.

□ யார் அவர்கள்.


● நீரிழிவு வியாதிக்காரர் சங்கம்

● □

● அப்பா இந்த மாமா நம்ப முடியாத கட்டுக்கதை எல்லாம் சொல்கிறார்.

□ அப்படி என்ன சொல்கிறார்.

● இலங்கையில் முன்பு ஒரு இறாத்தல் சீனி -/54 சதத்திற்கு விற்றதாம். பத்துச் சதத்துக்கு டீ கிடைக்குமாம்



● சீனியை எவ்வளவு தான் விலை கூட்டினாலும் எங்கப்பாவுக்குக் கவலை இல்லை?

□ ஏன்?

● அவருக்கு சர்க்கரை வியாதி

● முன்பெல்லாம் 'பார்' பக்கமே போகாதவன் இப்போ என்ன பெருங்குடிகாரனாக மாறிவிட்டான்.

□ சீனி விலை கூடியபிறகு அவன் கடையில் டீ குடிப்பதை நிறுத்திவிட்டான்.


● ●



● சீனி விலையைக் கூட்டியதன் மூலம் இலங்கைமக்கள் சர்வதேச அந்தஸ்துக்கு உயர்த்தப் பட்டிருக்கிறார்கள்.

□ எப்படி?

● உலக சந்தை விலைக்குத்தான் நாம் இப்போ சீனி வாங்குகிறோம்.




● நம்ம சண்முகத்தின் வளர்ச்சியைப் பார்த்தாயா? மூணும் வருஷம் மாடிவீடு கட்டினான் போன வருஷம் கார்வாங்கினான். இந்த வருஷம் லொறி வாங்கியிருக்கிறான்.


□ அவன் மளிகைக் கடைவியாபாரி அல்லவா? மூணும் வருஷம் அவனிடம் நாறுமூடை சீனி ஸ்டொக் இருந்ததாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




★ சீனி வாங்கிக் கட்டுப்படியாகவில்லை. இனிமேல் டீக்குப் பதிலாக வேறு ஏதாவது தான் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும்.



● உட்கார்ந்த இடத்திலிருந்தே ஆயிரக்கணக்கில் சம்பாதிக்க ஏதாவது ஆலோசனை கூற முடியுமா?

□ ஒரு ஐம்பது மூடை சீனியை வாங்கி வீட்டுக்குள் பூட்டி வை வருடா வருடம் லாபம் வந்துகொண்டேயிருக்கும்.



● அரசாங்க வைபவங்களில் இனி தேநீர் விருந்து இடம் பெறுதாம். பதிலாக குடிவகை உபயோகிப்பார்களாம்

□ ஏன் அப்படி?

● சீனி விலை உயர்ந்துவிட்டதால் சிக்கனத்தைக் கடைப் பிடிக்கப் போகிறுர்கள்.

★ இனிமேல் வீட்டில் எல்லோரும் இனிப்புக்கள்ளைக் குடிப்போம். பால் காசும் மிஞ்சும்



● சீனிவிலை ஆறு ரூபாயாகிவிட்டது. அடுத்து என்ன ஆகுமோ தெரியாது.

□ நாட்டில் யாரும் டீபார்ட்டி நடத்தக்கூடாது என்று சட்டம் வரப்போகிறதாம்.



● மளிகைக் கடைக்காரர் சங்கம் அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி நிதிக்கு ஒருலட்சம் ரூபா நன்கொடையாக அளிக்கப் போகிறுர்களாம்

□ செய்யமாட்டார்களா! பின்னே மூன்று தடவை சீனி விலைஉயர்த்திருக்கிறதல்லவா.

மணி



● மக்கள் நன்மையைக் கருதித்தான் அரசாங்கம் சீனிக்கு விலையைக் கூட்டியிருக்கிறது.

□ எப்படி?

● இப்போது சீனி தட்டுப்பாடில்லாமல் தாராளமாகக் கிடைக்கிறதல்லவா?



● சீனி விலையேற்றத்தின் மூலம் அரசாங்கம் ஒரு பெரிய உண்மையைக் கண்டுபிடித்திருக்கிறது.

□ என்ன அது?

● எந்த ஒரு பொருளுக்காவது தட்டுப்பாடு ஏற்படுமானல் அதைத் தடுக்கவழி அதன் விலையைக் கூட்டிவிடுவது தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தில் நகைச்சுவை

சோ. நா. தர்மராசா

இலக்குவனல் அமைக்க பட்ட பர்ணசாலையில் இராமனும் சீதையும் இன்பமாகப் பொழுதைக் களிக்கின்றனர். இராவணனின் தங்கையான சூர்ப்பனகை இராமனைக் கண்டு விடுகிருள். அழியா அழகுடைய அண்ணலைக் கண்டதால் தனது உள்ளம் அழிகிருள் சூர்ப்பனகை. மன்மதனின் ஐங்கணைகள் அவள் மெய் தனைத் தொளைக்கின்றன. ஆசை முந்துகின்றது. நாணம் பிந்துகின்றது. உணர்ச்சி உந்துகின்றது அரக்கக்கோலத்தைக் களைந்துவிட்டு அழகான காமவல்லியாக அன்ன நடை நடந்து அண்ணல் இராமனை நோக்கி வருகின்ருள். காதல் மொழி தருகின்ருள். அவனழகைப் பருகுகின்ருள், உடல் மெலிந்து உருகுகின்ருள். உத்தமன் இராமனு உள்ளம் உருக்குலைவான். அவளை உதாசீனம் செய்கிருன்,

இராமனல் வெறுக்கப்பட்டு கலைக்கப்பட்ட சூர்ப்பனகை. இலக்குவனைக் காண்கிருள் - அவன் தான் என்ன அழகிலே குறைந்தவனு. கருகும் காமப் பயிருக்குக்கார் முகிலாக இருக்கிருன் அவன். அவளது தேவைதான் என்ன. 'நக்க வெளிக்கிட்ட நாய்க்கு செக்கென்ன சிவலிங்கம் என்ன' என்பார்களே அதே நிலைதானே. இலக்குவனை நெருங்கி இணையான இருகனைக் கண்களைவீசி இதமாகப்பேசி, இன்பத்தை நாடி நிற்கின்ருள். மூத்தவனுக்காகத் தன்வாழ்வைத் துறந்து தியாகியாகி நிற்கும் இளையவனின் சிந்தனையில் தீய எண்ணங்கள் சிறகடிக்குமா? பாலைவனத்திலே பயிர்வளர்க்க முற்பட்ட பாவை சூர்ப்பனகை படுதோல்வி அடைகிருள். அவளது "இருசெவி மூக்கோடு ஈர்ந்து..." கலைத்து விடுகிருன்.

அவலக் குரலோடு அஞ்சி ஓடிவந்த அவளுக்கு அபயக் கரம் நீட்டுகிருன், அவளது சகோதரனன கரன் என்பான், தங்கையை மானஈனப் படுத்திய இராம இலக்குவரோடு பெரும்போர் புரிந்து இறந்து விடுகிருன் இப்போது அவளுக்குப் புகலிடம் இராவணன் அன்றி வேறுயார். தனது மூத்த சகோதரனன மூவுலகாளும் இராவணனிடம் முறையிடுவதற்காக இலங்கை நகர் நோக்கி ஓடோடி வருகின்ருள்.

இராவணன் மூவுலகும் அரசாண்டு கொண்டிருக்க தேவர்களும் இராவணனுக்கு ஏவல் செய்து கொண்டிருக்கும் நேரத்தில் இராவணனின் தங்கையோ அறுந்த மூக்கும் தொங்கிய காதும் அழுதசோகக் குரலுமாக அவல நிலையில்லை ஓடிவந்தால் எப்படி இருக்கும், இலங்கையிலுள்ள மக்கள் சூர்ப்பனகையின் கோலத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவளுக்கு நடந்தது என்ன என்று ஆராய்கின்றனர்.

கம்பர் இதனை மிகவும் அழகாக நகைச்சுவையாகக் கூறுகின்ருர். தேவரும், மூவரும் யாவரும் இராவணன் ஏவ அரும்பணி செய்து இன்னுயிர் சுமக்கும் காலத்தில் இராவணனின் தங்கைக்கு இடையூறு செய்யும் அளவுக்குத் தைரியசாலி யாராவது இருக்க முடியுமா என்று ஒவ்வொருவரும் யோசிக்கிருர்களாம். யாராவது இவளுக்குக் கேடுசெய்ய வந்தால் இவள் எப்படியும் தான் இராவணனின் தங்கை என்று இயம்பிவிடுவாள் அதன் பின்பும் யாராவது கெடுதல் செய்ய நினைப்பார்களா. அப்படியாயின் இவளுக்கு மூக்கை அறுத்த மூர்க்கன் யாராக இருக்க முடியும். இவளுக்கு யாருமே மூக்கை அறுக்கவில்லை. அப்படியாயின் மூக்கு எப்படி அறுந்தது என்று ஆராய்கிருர்களாம் நாட்டு மக்கள். இறுதியாக அவளது மூக்கு யாரால் அறுக்கப்பட்டிருக்கலாம் என்று நாட்டுமக்கள் கண்டு பிடிக்கிருர்கள். அதனைக் கம்பர் அழகாகக் கூறுகின்ருர்.

என்னையே இராவணன் தங்கை என்றபின்  
அன்னையே என்றடி வணங்கல் அன்றியே  
உன்னவே எண்ணுமோ ஒருவரால் இவள்  
தன்னையே அரிந்தனள் தானென் ருர்சிலர்.

இராவணனது தங்கை என்று அறிந்ததும் அன்னையே என்று அடிபணிந்து வணங்குதல் அன்றி இப்படிக்கேடு செய்ய யாராலாவது நினைக்கக்கூட முடியாதே. அப்படி இருக்க, யார் இவளது மூக்கை அரிந்தார்கள். என்று ஆராய்வதில் அர்த்தம் இருக்காது. இவள் தனது மூக்கைத் தானே தான் அரிந்தாள். அப்படித்தான் இருக்கும் என்கிருர்களாம்.

எப்படி இருக்கிறது கவிச்சக்கரவர்த்தி கம்பரின் நகைச்சுவை. இராவணனின் ஆட்சித்திறமையையும் அதில் நாட்டுமக்களுக்கு இருந்த நம்பிக்கையையும் இந்த நகைச்சுவைமூலம் தெளிவாகக் காட்டுகின்ருர். □

● மல்யுத்தம் இப்போ இல்லாமலே போய்விட்டது?

□ விலைவாசி ஏற்றத்தில் பயில்வான் பசிக்கு எப்படி இரை போடுவது.




அதிக சுவைக்கு அண்ணா கோப்பியே!

அண்ணா கோப்பிக்கு நிகர் அண்ணா கோப்பியே!!

அண்ணா கோப்பி

தொழிலகம்.

இணுவில். தொலைபேசி; 7412




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசுரகணம்

● ஸ்ரீதேவகாந்தன்

அவனுக்குப் பென்சன் கிடைத்து விட்டது. நாற்பது வருட உழைப்பின் பின் வேலையிலிருந்து ஓய்வுபெறும் பெரியசாமி 'கிடைத்த பணத்தை எப்படிப் பாதுகாக்கலாம்' என்ற சிந்தனையில் மூழ்கினான். கறுப்புக் கம்பளியோடும் இடுப்புச் சாக்கோடும் கொட்டும் மழை, கொளுத்தும் வெய்யில், பட்டுத்தெறிக்கும் பனி வாடை இவற்றோடு அட்டைக்கடி தந்த ஆறாத புண்ணோடும் பச்சை மலைத் தோட்டம் முழுதும் இச்சைதீர எல்லா வேலைகளுக்குமாய் ஏறி இறங்கிய அவன்-இனிமேல் எட்டடி லயத்துக் காம்பராவே தஞ்சமென இருந்துவிடவா போகிறான். அவன் கடந்து வந்த கரடுமுரடான வாழ்க்கைப்பாதையின் அடிச்சுவடுகளை - அவனது கால் வெடிப்புகளே கதைகதையாய்க் கூறும்.

வேலைக்கென பச்சைமலைத் தோட்டத்தில் வந்து சேர்ந்தது முதல் இன்றுவரை - ஒரே லயத்தின் காம்பராவில் வளர்ந்து வாழ்வின் இலயம் பிசகாமல் வாழ்ந்து உழைத்து செங்கமலத்தைத் திருமணம் செய்து ஆறு ஆணும் ஆறு பெண்ணுமாய் பன்னிரண்டு பிள்ளைகளைப் பெற்று. தலா ஒவ்வொன்றைப் பிறப்பிலேயே பறிகொடுத்து, வாயைக்கட்டி வயிற்றைக் கட்டிச் சேர்த்து. ஆறு பேருக்குத் திருமணம் செய்து வைத்தபின் - ஆண் பிள்ளைகள் கூட மாமன் - மாமியின் சொத்துக்களாய் மாறி, அம்மா, அப்பா உடன் பிறப்புக்களில் அணுவளவும் அக்கறையின்றி இந்தியா சென்றுவிட - அந்த ஏக்கம் செங்கமலத்தைத் தாக்க ஒரே வாரத்தில் அவள் ஆறடி மண்ணின் அரசியாய் அமிழ்ந்து விட, மீதி நால்வரின் சுகமொன்றே தன் குறிக்கோளாய்க்கொண்டு நேற்று வரை உழைத்த பெரியசாமி, இன்றுவேறு வேலைதேடி நாட்டை நோக்கி நடக்கத்தொடங்கினான்.

'ம்...இனி ரெண்டு பொம்புள புள்ளைங்க ஒழைக்குறத வச்சிக்கிட்டுத்தான் காலத்த ஓட்ட வேண்டியிருக்கு, காலாகாலத்துல அதுகளயும் ஒவ்வொருத்தன் கைல புடிச்சிக் குடுத்துட்டா நிம்மதி தான். ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு ஆம்புள புள்ளன்னு குப்புசாமி ஒருத்தன் தான் மிச்சம். 'படிக்குறேன் படிக்குறேன்'னு பதனாறு வயசுலயே தறுதலயா பொயிருவான் போலருக்கு கெழமைல நாலு நாளைக்குத்தான் ஸ்கூலுக்குன்னு போறான். ஆனா ஒருநாளைக்கு அஞ்சி ரூவாக்கு கொறையாம குட்டிச் சொவராக்குறான். காசில்லேன்னா அடிக்கவர்ரான். மாரியாத்தாதான் அவனுக்கு நல்ல புத்திய குடுக்கணும் சிந்தனை நீண்டு கொண்டேயிருந்தது. ஒட்டியுலர்ந்த முகத்தோடு 'எலும்பெல்லாம் எண்ணிப்பார்க்கலாம்.' என்ற கோலத்திலிருந்தாலும் - காலத்தோடு போராடும் வல்லமை மிக்கவனாகவே காணப்பட்டான்:

பச்சை மலைத்தோட்டத்தை முழுமையாகத் தாண்டித்தான் நாட்டுக்குப் போக வேண்டும். பெரியசாமியின் கால்கள் உராய்வில் தேயிலைச் செடிகளின் இலைகிளைகளில் தேங்கிநின்ற காலைநேரப் பனித்துளிகள் முத்துமுத்தாய் சிதறி விழுந்தன. பனிநீர் நிறைந்து உருண்டுவிழ தயாராய் நின்ற தேயிலை இளந் தளிரொன்றைப் பவ்வியமாகப் பறித்து, சிறுபிள்ளைபோல் வாயில் வைத்து

## மூர்த்திகரம்

உற்சவ மூர்த்தியிடம், மூலஸ்தானத்து மூர்த்தி சொன்னார் —''உனக்கென்னப்பா அதிஷ்டக்காரன் தினம் தினம் ஒவ்வொரு வாகனத்தில் அலங்காரமாக ஊர்சுற்றி வருகிறாய் என் தலையெழுத்து ஒரேயிடத்தில் நிலையாக இருக்கவேண்டியிருக்கு...''

உற்சவமூர்த்தி சலித்துக் கொண்டார்...

''உனக்கென்னப்பா நீதான் அதிஸ்டக்காரன் இருந்த இடத்திலேயே, அபிஷேகம் ஆராதனை ராஜோபசாரம்... என்தலையெழுத்து மனிதர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் போய் தெருத்தெருவாய் திரிந்து உபசாரம்தேட வேண்டியிருக்கு...

மௌனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திக் கிண்டல்



- இரத்த வங்கியில் இரத்தத் திற்குத் தட்டுப்பாடாமே!
- நம்மவர்க்கு இரத்ததானம் செய்து பழக்கமில்லை. அன்ன தானத்தில் சாப்பிடும் பழக்கம்தான் உண்டு.

---

உறிஞ்சினான். ஜில்லென்ற குளிர்மையுடன் பனிநீர் வயிற்றின் உள்ளே போய் ஒருதனி கிளுகிளுப்பை உண்டாக்கியது அப்படியே மெய்மறந்து நின்றவனைப் பார்வைக்கு எட்டியவரை கண்களைச் சுழல விட்டாள்.

கவிஞனாகவோ - கற்பனாவாதியாகவோ இருந்திருந்தால் நிச்சயம் அவன், காலையிளம் பரிதியையோ உச்சி மலையிலிருந்து கொச்சை மொழி பேசுவதுபோல சலசலத்து ஓடிவரும் நீரோட்டத்தையோ ஓங்கி உயர்ந்து நிற்கும் மரங்களையோ வான்வெளியில் வட்டமிடும் பறவைகளையோ வாய்கூசாமல் பாடித் தள்ளியிருப்பான். அவன் முதுகெலும்பொடிய - முற்றிய வெய்யிலில் இரத்தமே வியர்வையாகி ஆறுகப் பெருக உழைத்தவனாயிற்றே! அவன் கண்களில் பட்டதெல்லாம் தன்னையொத்த உழைப்பாளிகளின் ஒட்டியுலர்ந்த கோலங்களே!

காலை வேலைக்கான கடைசிச் சங்கொலி - ஸ்டோரிலிருந்து நீண்டு முழங்கி கடைசி ஒலியாய் மலைகளில் முட்டிமோதி தேய்ந்து உழைத்துக் களைத்த தொழிலாளியின் பெருமூச்சாய் பெரியசாமியின் காதுகளில் விழுந்த போது உணர்வு பெற்றவனாய் அவன் தன் நடையைத் தொடர்ந்தான்.

# 2

அப்பா அப்பா... அந்தியில் வீடு திரும்பிய பெரியசாமியை, அவனுடைய பத்து வயதுச்சின்ன மகள் சிணுங்கலுடன் ஓடிவந்து கட்டிக்கொண்டாள். "அப்பா... அண்ணை ஏமுட்டு உண்டியல ஓடச்சி போட்டுட்டு இருந்த சல்லியெல்லாம் எடுத்துக்கிட்டுப்பொயிரிச்சிப்பா" அவள் பெரிய சத்தமாய் அழத் தொடங்கினாள். இப்போதைக்கு வீட்டுக்கு மூத்தவளான மீனாட்சி ஸ்தோப்பிலிருந்து வாசலுக்கு வந்தாள். அப்பன் கேட்காமலே அவள் சொன்னாள் இன்னிக்கு ஏதோ புதுப்படம் போட்டிருக்காம் நா வந்தவுடனே காசு கேட்டு கரச்சல் பண்ணுனான். நா குடுக்கல தங்கச்சிய அடிச்சிப்புட்டு அவளூட்டு உண்டியல ஓடச்சி எடுத்துக்கிட்டுப் பொயிட்டான்."

பெரியசாமிக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. "படுவாப்பய மவன் வரட்டும் இன்னிக்கி ரெண்டுல ஒண்ணு கேட்டுடணும் ஒழுங்கா இருக்குறதுன்னா ஊட்டுல இருக்கட்டும். இல்லாட்டி எங்குட்டாக்கும் போயி தொலையட்டும். பெரியபாப்பா! அவனுக்கு சோறு வைக்காத. பட்டினி கெடந்து சாவட்டும்."

கயிற்றுக்கட்டிலில் தொப்பென அமர்ந்தான் பெரியசாமி. கயிறு லூசாகி இருந்ததனால் 'கிறீச் கிறீச்' என சத்தம் வெளிப்பட்டது.

இரவு பத்து மணிக்குப்பிறகு வீடு வந்த குப்புசாமி, ஸ்தோப்புக் கதவை படவென தட்டினான் ஆத்திரத்துடன் கட்டிலில்புரண்டு கொண்டிருந்த பெரியசாமி ஆவேசத்துடன் எழுந்து - கதவைத் திறந்த வேகத்தில், கையிலிருந்த 'கதவுக்குக் குறுக்கே போடும்தடியினால்' விளாசி விட்டான் மகனை குப்புசாமி அலறிக்கொண்டே— அசிங்கமான வார்த்தைகளால் அப்பனைத் திட்டினான்.

பெரியசாமி வெலவெலத்துப் போனான். அந்த லயமே கூடிவிட்டது அங்கு. பெரியசாமி தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உள்ளே போனான். அவனது கண்கள் குளமாகின. தலையைக் கைகளால் தாங்கியவாறு அடுப்படியில் குந்திவிட்டான். அவனது மனம் ஊமைக்குரலில் ஓலமிட்டது. 'இந்த ஆறுவது வயசுல ஒருபய என்ன நீன்னுசொன்னதுல்ல இன்னிக்கி... நாபெத்த புள்ள மொளச்சி மூணெல வரல்ல அதுக்குள்ள எப்புட்டு அசிங்கமா பேசிப்புட்டான். அடேய்! பெத்த அப்பன இப்புடி பித்துப்புடிக்கச் செய்துட்டேயடா! நீ... நீ உருப்புடுவியா'

மீனாட்சி, தம்பியை வீட்டுக்குள் கூப்பிட பகிரதப் பிரயத்தனம் செய்தாள். 'கெஞ்சினால் மிஞ்சுவது' அவனுக்குக் கை வந்த கலையாயிற்றே. பெரிய பிகு பண்ணிக் கொண்டிருந்தான்,

"இந்தாப்பா சின்னத்தம்பி தெரியாம அடிச்சிட்டேன். கோவிக்குறுத. தலைக்கு மேல வளந்துட்ட, அதமறந்து... நா ஒன்ன கொழந்தயாவே நெனச்சிட்டேன் பெத்த அப்பனையே கன்னா பின்னான்னு ஏசிப்புட்ட பரவாயில்ல நீ படிச்சவன் நாஒண்ணுமே படிக்

---



- மேலை நாடுகள் என்று இனிச் சொல்லத் தேவையில்லை.
- ஏன்?
- அவை எம்நாட்டவர்க்கு வேலை நாடுகளாக மாறிவிட்டன. —கேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



● யாரும் அடிப்பவர்க்குப் பயந்து ஒளித்து நிக்கிறீங்களா?

☐ ஓம்... தம்பட்டமடிப்பவர் ஒருதருக்குப் பயந்து நிற்கிறேன்.

---

காத முட்டாய்பய மவன்தானே பொறுத்தக்கப்பா - ஊரக் கூட்டாம உள்ள வாப்பா.'' பெரியசாமி தான் ஏதோ பெரியதவறு செய்து விட்டது போல தணிந்த குரலில் பேசினான்.

கண்களை மறைக்கும் மயிர்க் கற்றைகளை, தலையைக் குலுக்கி ஒதுக்கியவாறு வீட்டிற்குள் வந்தான் குப்புசாமி.

# 3

அந்த வருசம் பத்தாம் வகுப்பிற்குப் பாசாகியிருந்தான் குப்புசாமி. வருட ஆரம்பத்திலேயே சுற்றுலா போகப் போவதாக நச்சரிக்கத் தொடங்கி விட்டான் உடுப்புக்கும் செலவுக்குமாய் ஐநூறு ரூபாவிற்கு அடி போட்டான். பெரியசாமி மலைத்துப் போனான். ஐநூறு ரூபாயா? ஏம் பென்சன் காசே போதாம இருக்கு பெரிய பாப்பா கண்ணாலத்துக்கு இவனுக்கு ஐநூறு ரூபாவா? பெரியசாமி எவ்வளவோ எடுத்துரைத்தான். 'அதுக்கு இதுக்குன்னு எல்லாம் காசு செலவழிக்க மரத்துல யாடா காய்க்குது. அக்காமாரோட கண்ணாலத்துக்கே எம்புட்டோ காசுவேணும். இப்ப ஒழுங்காப் படி அதெல்லாம் அப்பறமா பாத்துக்கலாம்.''

குப்புசாமி முறைத்துக் கொண்டு நின்றான் ''ஸ்கூலு முடிஞ்சப்புறம் எங்க போறதாம். இந்த வருசந்தான் கடைசி. நா எப்படியும் போவணும் எனக்கு காசு குடுக்காட்டி சாப்புடமாட்டேன். போ...' பெரியசாமிக்குக் கோபம் அளவு கடந்தது. 'டேய் ராஸ்கோலு... நீ சாப்புடாட்டி போடா. எத்தினி நாளிக்குத் தான் இருப்ப பாப்பமே... ரெண்டு நாளக்கி ஒன்னால இருக்க முடியுமாடா. குண்டி காஞ்சா குதுர வைக்கப்பில்லு திங்குமாம் அதுமாரி... போடா போ...'

என்னவோ ரெண்டுநாள் குப்புசாமி வீட்டில் சாப்பிடவேயில்லை. யாரோடும் பேசவுமில்லை ஆனால் காலை மாலையென்று இரண்டு வேளை டவுனுக்குப் போய் வந்தான். ஸ்கூலுக்கு மட்டும் போகவில்லை. மூன்றாவது நாள் காய்ந்த வயிறு கத்தத் தொடங்கியது. கண்ணை மூடிக்கொண்டு இருந்ததைச் சாப்பிட்டான். பெரியசாமி தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அன்று நாட்டுக்குப் போய் வேலைசெய்துவிட்டு, பெரியசாமி வீட்டுக்குத் திரும்ப கொஞ்சம் நேரமாகி விட்டது. இருட்டிய பிறகே வந்தான். வந்ததும் வராததுமாக பெரிய பாப்பா மீனாட்சியின் ஒப்பாரிச் சத்தம்தான் பெரிதாய்க் கேட்டது. அப்பனைக்கண்டதும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அலறினாள். ''அப்பா...தம்பி போயிட்டாம்பா என்னாட்டு நகையெல்லாம் எடுத்துக்கிட்டுப் போயிட்டாம்பா. மல்லி சின்டுல போட்டு வச்சிருந்தானே! அவன் நாசமாப் போவ அவன வாரிக்கிட்டுப் போவ...'

பெரியசாமியின் சிந்தனையில் 'அவனது பென்சன் பணத்தோடு பிள்ளைகளின் சம்பளத்தில் சிறுகச் சிறுக சேமித்த பணத்தையும் சேர்த்து யாருக்கும் தெரியாமல் சூடப்பெட்டியொன்றில் போட்டு அம்மிக்கல்லுக்கடியில் வைத்து பத்திரப்படுத்திய வட்டம் பட்டது. மெதுவாக அம்மிக்கல்லைப் புரட்டினான். அடியில்...வெறுமை அவனைப் பார்த்து வாய் பிளந்தது. 'யாருக்கும் தெரியாதென நினைத்தானே கையோடு மெய் சோர அதிர்ச்சி உடலை ஆட்ட 'ஆ'வென அலறியவாறுஅடியற்ற மரமாய்த் தரையில் சாய்ந்தான்.

''ஐயோ அப்பா'' மூன்று பெண்களும் ஒருசேர அலறிக் கொண்டு அப்பனைச் சூழ்ந்து கொண்டனர், 'பெரியபாப்பா... சின்னப்பாப்பா... எல்லாம்போச்சும்மா. ரெத்தத்தக் கொட்டி நாப்பது வருசம் ஒழச்ச ஒழப்புக்குக் கெடச்சுது ஒங்க ரெண்டு பேரோட கண்ணாலத்துக்கு ஆவுமுன்னு இம்புட்டு நாளா பூதம் காத்த பொதையலா பாதுகாத்தேன். இன்னிக்கி எல்லாம் ஒரு நொடியில போச்சுடி பாவிமவளே நா போட்ட வெதையே நஞ்சா போச்சி. ஒங்க தம்பியே ஒங்களுக்கு எமனாயிட்டான். நாஎன்ன செய்வேன் நா என்ன செய்வேன் அதற்குமேல்பேச முடியாதவனாய் மூச்சுத்திணறினான் பெரியசாமி.

''அப்பா காசு போனா பொயிட்டு போவுதப்பா நீங்க இருந்தா போதும்பா. எங்களுக்கு கண்ணாலமும் வேணாம் - ஒரு கழுதையும் வேணாம் நீங்கதான் வேணும்பா.

''என் பென்சன் பணம்...... எம் புள்ளைங்க கண்ணாலம் பாவி மவன்...'' பெரியசாமியின் அவலக்குரல் தொடர்ந்து கொண்டேயிருந்தது. ☐

யாவும் கற்பனை

---

● வெள்ளைக்காரன் எதிர்காலத்தை உணர்ந்து உழைப்பவன்.

☐ ஏன் தமிழனும் எதிர்காலத்தை உணர்ந்து உழைப்பவன். பிறவாத பேரப்பிள்ளைக்கும் சொத்துத்தேடுபவனல்லவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ஆகக்கூடிய வட்டி விகிதத்தை
வழங்கும் ஒரே நிறுவனம் 'மகாராஜா'
யாழ்நகர் மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்

இவற்றை வழங்குவதோடு

'போட்டோ ஸ்ரட்'
சிறந்த பிரதிகளையும் வழங்குகிறது.
பிரதி ஒன்று 75 சதம் மட்டுமே.

மகாராஜா முதலீட்டுவரையறுக்கப்பட்ட
நிதி நிறுவனம்.

● ஒருவருட வைப்புப் பணத்திற்கு
21% வீதம் மாதாந்த வட்டியாகவும்
● இருவருட வைப்புப் பணத்திற்கு
23% வீதம் மாதாந்த வட்டியாகவும்
● இருவருடக் காலமுதிர்வு வட்டியாக
25% வீதத்தையும் வழங்குகிறது.

குறைந்த பட்ச வைப்பு: ரூபா 500!-
விபரங்கட்கு:

மகாராஜா முதலீட்டு
(வரையறுக்கப்பட்ட)
நிதி நிறுவனம்.
122 கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8267

# தேசங்களும் கீதங்களும்

- உலகிலேயே இருமொழிகளில் தேசிய கீதத்தைக் கொண்டநாடு இலங்கைதான். சிங்களமொழியில் இதனை கவிஞர் ஆனந்த சமரக்கோனும் தமிழில் முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பியும் எழுதியுள்ளனர்.
- இந்திய தேசியகீதம் மகாகவி ரவீந்திரநாத்தாகூரால் இயற்றப்பட்டது. இந்தியாவின் பலஇன மக்களையும் இணைக்கும் ஒருமைப்பாட்டின் கம்பீரத்தைக் கொண்டது இப்பாடல்.
- உலகிலேயே மிகச்சிறிய தேசிய கீதத்தைக்கொண்ட நாடு ஜப்பான்... பாடலுக்கு நான்கு வரிகள் மட்டுமதான் உள்ளது.

□ □ □

# ஷோபா

- மிகக்குறைந்த வயதிலேயே அகில இந்தியாவின் சிறந்த நடிகைக்கான 'ஊர்வசி' விருதைப்பெற்றவர் — வயது 17.
- மிகக்குறைந்த வயதிலேயே அதிக மொழிப்படங்களில் நடித்து புகழ் பெற்றவர்.
  மொழிகள் — கன்னடம், தெலுங்கு, மலையாளம்
  தமிழ்...
- மிகக்குறைந்த வயதிலேயே ஒருபடத்தின் தயாரிப்பு —நெறியாள்கை — கதைவசனம் படப்பிடிப்பில் உதவியாளராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர் படம் 'அழியாத கோலங்கள்'
- தமிழில் 'ஆர்ட் படங்கள்' தயாரிப்பவர்களுக்கு தன் முழு ஒத்துழைப்பையும் நல்கிய கலைத்தாகம் கொண்ட நடிகை.
  படங்கள்; குடிசை, பசி, 'அழியாத கோலங்கள்'
  புதிய அடிமைகள்...

□ □ □

# போக்கிடம்

ஒரு மாடிவீட்டுக்காரரின் பழைய வெளிநாட்டுச் சப்பாத்தும் - ஒரு குச்சு வீட்டுக்காரனின் பழுதடைந்த செருப்பும் ஒரே குப்பையுள் வீசப்பட்டுக்கிடந்தன.

செருப்பு, சப்பாத்திடம் கேட்டது...

உன் பெயரென்ன விலாசமென்ன... கடைசியில் உனக்கும் இந்த இடம்தானா கிடைத்தது?

'பெயர் விலாசத்தில் என்ன இருக்கிறது? செத்துப்போனால் சவம்... உபயோகமற்றுப்போனால் குப்பை... இதுதான் பொதுவிதி'' என்று சுடலை ஞானம் பேசியது சப்பாத்து.

மௌனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறுபிறவி மகாத்மியம்

ஸ்ரீவாணி

- சுகாதாரப் பரிசோதகர் தம் கடமையைச் சரிவர ஆற்றுவிட்டால் அடுத்த பிறவியில் காகமாகப்பிறப் பார்.
- தலைகீழாக நடக்கும் அரசாங்க அதிகாரி அடுத்த பிறவியில் வௌவாலாகப்பிறப்பார்.
- எந்த விஷயத்திலும் மற்றவரைக் 'காப்பி' அடிக் கும் சுபாபமுள்ளவன் மறுபிறப்பில் வான்கோழி யாகப் பிறப்பான்.
- வேலைநேரத்தில் தூங்கி வழியும் இரவுக்காவல்க் காரன் அடுத்த பிறவியில் ஆந்தையாகப் பிறப்பார்.
- பஸ்ஸில் பெண்களுக்கு இருக்க இடம்கொடாது தாமிருந்து பிரயாணம் செய்யும் ஆண் அடுத்த பிறவியில் ஒற்றைக்காலில் தவமிருக்கும் கொக்காக பிறவியெடுக்கலாம்.
- அளவுக்கதிகமாக குடித்து கண்கள் சிவக்க வெறி யில் திரிபவர் அடுத்த பிறவியில் செண்பகமாக பிறந்து மயிர்கொட்டிகளை விழுங்கித்தொலைப்பார்.
- வீட்டு வேலைக்காரச் சிறுமியை சுடுசொற்களால் ஏசி நெருப்பால் சுடும் எஜமானி அடுத்த பிறவி யில் நெருப்புக் கோழியாகப் பிறக்கலாம்.
- மனைவி சொன்ன சொல்லுக்கெல்லாம் 'ஆமாம்' போடும் கணவன், ஓணானாகப் பிறக்க அடுத்த பிறவி காத்திருக்கிறது.
- தன்வேலையில் சுறுசுறுப்பில்லாமல் இயங்கி மாதச் சம்பளம் பெறும் ஊழியர் அடுத்தபிறவியில் நத்தை யாகப் பிறக்கலாம்.
- ———மறுபிறவிகள் தொடரும்—

## கலைத்தேன்

தேனுகா

### மொழியியல்

அந்நிய நாடு போகவேண்டுமெனப் பிடிவாதமாக நின் றான் மகன்.

தந்தை சொன்னார்— அந்நியநாடு போவதற்கு உனக்கு தமிழ் மொழியைத்தவிர வேறு எந்த மொழியும் தெரி யாதே... அங்குபோய் விழியாலா பேசப்போகிறாய்?

அதற்கு மகன் ''நான் உல்லாசப்பிரயாணிகள் ஹோட் டலில் சமையல் பழகியவன், எங்கெல்லாம் வயிறு என்ற ஒன்றிருக்கின்றதோ அங்கெல்லாம் பசி இருக் கும். பசி ஒரு உலகப்பொதுமொழி அந்த மொழியைப் புரிந்தவன் நான்' என்று அமைதியாகப் பதில் கூறினான்.

# பிரவாகம்

மௌனா

பஸ் நிலையம்

ஜனசந்தடிகளின் ஆர்ப்பரிக்கும் ஒலியையும்மீறி ஒலித்து அனைவரையும் ஆக்கிரமித்து மயக்கிக் கொண்டிருந்தது அந்த புல்லாங்குழல் இசையின் நாதவெள்ளம்.

விழாவொன்றில் பேசப்போகும் அவசரம் எனக்கு இருப்பினும் இசையில் லயிக்கும் மனத்தை இழுத்துக் கொண்டு போவது அவ்வளவு சுலபமாயில்லை.

குழுமி நிற்கும் கூட்டத்திடையே தலையை நுழைத்துப் பார்க்கிறேன்.

பத்துப் பன்னிரண்டு வயதுப்பாலகன்.

கோவில் விக்ரகம் மாதிரி.

பிறவிஞானம் போலும், இசை மடைதிறந்து பாய்கி றது.

நுழைந்த தலையை இழுக்க மறந்தநிலை

பிரபஞ்சகீதம் நின்றது போன்று...

சில்லறைகள் விழுகின்றன. கூட்டம் கலைகிறது.

நான் நிற்கிறேன். மெய்மறந்தநிலை.

அந்தச் சிறுவன் என்னையே பார்க்கிறான்.

இல்லை... ஆட்கொள்கின்றானோ...?

நான் கேட்கின்றேன்... ''தம்பி... உங்க அப்பா, அம்மா?

ஒருகண மௌனம் — பிறகு...

அப்பா... காலஞ்சென்ற சங்கீத வித்வான் ஞானபண் டிதர்... அம்மா... என்றபடியே பின்னால் இருந்தழுதிய பெண்ணைப் பார்த்தான்.

எனக்குப் பொறிதட்டியது.

அவசரமாக பொக்கற்றுள் இருந்த விழா அழைப்பிதழை எடுத்துப்பார்த்தேன்.

'மகாவித்வான் ஞானபண்டிதர் நினைவுவிழா...'

கண்களை ஏதோ மறைக்கின்றதே...

கூட்ட நினைவு அகல... சரியான கூட்டத்தில் கலந்து விட்ட நிறைவு எனக்கு.

தம்பி... இன்னொரு பாட்டு வாசிக்கிறாயா? என்றபடி அவனருகே அமர்கின்றேன்.

---

● உண்மையான அறிவாளி தன் இரகசியத்தைத் தானே வைத்துக்கொள்ள வேண்டும்.

—அறிஞர் குய்ஸாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறங்கிக் கிடந்த
கனவுத் தொழிற்சாலையை
தட்டி எழுப்பிய சங்கொலியே

அழிக்கப்பட வேண்டிய
சினிமாக் கோலங்களை
சகித்துக் கொண்ட
எனக்கு—
உனது
அழியாத கோலங்கள்
ஆறுதலளித்தது.
நீ—
வெகுதூரத்தில்
ஜொலித்தபோது
நான் — நினைத்தேன்
நாளை ஒரு வசந்த பௌர்ணமியில்
குளிப்பேன் என்று
ஆனால்—
ஆழமான இருளில்
என்னை நிரந்தரமாக
அமிழ்த்திவிட்டு—சொர்க்கத்தில்
உலாவப்போனாய்—
ஷோபா
உனக்காக—
இந்த மரணம் இல்லாக்
கவிதைப் பூக்களை
காணிக்கையாக்குகின்றேன்.

# ஷோபா என்ற தேவதையை நினைத்து...

ஜனனிதரன்

# வாசிகனைத் தரிசனம்

- உண்மையான கலைப்பொருள் தெய்வ சிருஷ்டியின் சாயையேயாகும்.

□ □

- ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் இறைவனது கைகளால் வரையப்பட்ட தெய்வீக சிருஷ்டிகளாகும்.

அன்ட்ரூ ஜாக்ஸன்

□ □

- இசை இல்லாவிட்டால் வாழ்க்கை என்பதே ஒருபிழை ஆகிவிடும். இசையை உருவாக்குவதென்பது குழந்தை பிரசவிப்பதற்குச் சமமானதே

- நடனமாடுவது எப்படி என்பது தெரிந்திருக்கும் ஒரு கடவுளிடந்தான் நான் நம்பிக்கை கொள்வேன்,

- அழகின் குரல் மிருதுவாகப் பேசும்! மிகவும் விழித்திருக்கிற ஆத்மாக்களுக்குத் தான் அது கவர்ச்சியாகவும் தோன்றும்.

- புறாக்களின் காலடிகளோடு வரும் சிந்தனைகள் உலகத்திற்கு வழி காட்டுகின்றன.

—நியெட்ஷே

□ □

- உன்னுடைய ஆத்மாவில் சங்கீதம் இசைத்திருப்பதால் நான் உன்னை நம்புகிறேன்.

—பிளேற்றோ

□ □

- உயரவே பறந்து பழக்கப்பட்டுள்ள பறவை, உணவிற்காகப் பறப்பதைவிட்டுக் கீழே இறங்குவதைவிட பட்டினியால் சாவதேமேல்.

—கவிஞர் இக்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழித்தல்

## மௌன தவங்கள்

1

அவலங்களைச் சொல்லிவரும் வேளையிலேயே அதன் காரணிகளையும் கோடிட்டுக்காட்டுகிறார் ஆசிரியர் விதியென்று சொல்லிக்குழப்பும். நம்மவர் மத்தியில் இந்த முறை சரியானதும், பிரயோசனமானதுமாகும்.

இரண்டு கைகளையும் முழங்காலின்மேல் குறுக்காக வைத்துக்கொண்டு முகத்தைக்கைகளின் இடையில் புதைத்துக்கொண்டு தனிமையில் இருந்துகண்ணீர்விடும் இத்துப்போன சோட்டிக்காரி சின்னக்கா...

ஆழக்கடலில் அலைக்கழியும் மரக்கலம்போல். வாழ்க்கைக் கடலில் வரன்கிடைக்கா நிலையினிலே, கன்னங்கள் சுருங்கத் தலையில் நரைதோன்றக் கண்ணீரின் வெப்பத்தால் உடல்அவியக் குமர்இருக்கும் மூத்தக்கா—

இலவங்காய் பழுக்காமல் வெடித்துப் பஞ்சாகும் நடைமுறையை அறிந்தும் சொல்லாமல் மனதுள் இருத்திக்கலங்கி அறிவிழக்கும் தம்பி—

தான்பெற்ற செல்வங்கள் தவிப்பை வெறுப்பாக்கி வெறித்து நோக்கவும், அங்கங்கே குனிந்து குமுறவும் வகைதெரியா நிலையினளாய் அம்மா—

கண்ணீரின் குழந்தைகள்

மாற்றுவழி தெரியாமல் மௌனமாகத் தவம்செய்கின்றன... இவர்கள் காண்டீபன்களில்லாததினால் தானோ என்னவோ காலமெல்லாம் தவமாகி விடுகின்றது.

தாவணிபோய்க் கிமோனு வந்து, கிமோனுபோய்ச் சோட்டி வந்து சோட்டியும்போய், மக்ஸிவந்தும் சுமைகளோ போகவில்லைச், சுகங்களோ கிடைக்கவில்லை. இதன் காரணிகள் தெரியாதா? புரியாதா? இதில்வரும் சின்னக்காவையே பாருங்கள், வித்தியாசங்களைப்'பளிச்' எனத்தெரிந்து கொள்கிறாள். இருந்தும் அவள் கவனமும் சட்டைகளில் மட்டும்தான்.

கதையில் தரம் இருக்கிறது. இருந்தும் மனதில் நிற்பதாக இல்லை. திருப்பங்களிற்கு இடமில்லாது போனதால் கட்டுரையின் சாயல் தலைகாட்டுகின்றது. சொற்கள் பல இடங்களில் ஆலாபனையாக நீளுவது கதையின் இறுக்கத்தைக் குறைத்து விடுகின்றது. கதையை ஆசிரியர் சொல்லிக்கொள்கிறாரா? பாத்திரங்கள் சொல்கின்றனவா? குழப்பமாகிவிட்டது. ஆசிரியரின் சமூகப்பார்வை எழுத்துலகில் ஒரு ஆதர்வும் இன்னும் மேன்மையான கதைகளை ஆசிரியரிட்மிருந்து எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கை தோன்றுகின்றது.

கே. எஸ். சிறீஸ்கந்தராசா

2

சமூகத்தின் இருண்ட பகுதிகளில் வாழுகின்ற எண்ணற்ற மனித ஜீவன்களின் அவலங்களை, ஆசைகளை, அபிலாஷைகளை, ஏக்கங்களை, உணர்ச்சிகளை—முழுமையாகச் சொல்லப்போனால் அவர்களின் வாழ்வுப்போராட்டத்தை எந்தவிதமான சொல்லடுக்குகளோ வர்ணனைகளோ, மேக்கப்புகளோ இல்லாமல் அப்படியே (படம் பிடித்துக் காட்டாமல்) ஓர் அனுதாப உணர்வோடு, மனிதத் தன்மையோடு, ஆழ்ந்த சமூகப் பிரக்ஞையோடு தந்த (மௌனதவங்கள்) அற்புத சிருஷ்டியே

திருமலை இரா. செல்வம்

## விமர்சகர்களுக்கு...

- சிரித்திரனில் வெளிவரும் சிறுகதைகளை எவரும் நக்கீர விமர்சனம் செய்யலாம்.
- சிறந்தவை, அர்த்தபுஷ்டியானவை பிரசுரமாகும்.
- சிறுகதை இலக்கியம் வளரவும் - விமர்சனத்துறை சிறக்கவும் இப்பகுதியை வாசகர்கள் பயன்படுத்தவும்.

● ஆசிரியர்

## ஆத்மா

மன்னாதி மன்னர்களின் ஆத்மாக்களும், செருப்புத் தைக்கிறவனின் ஆத்மாவும் ஒரே வார்ப்பட்டடையில் ஒரே அச்சில் தான் வார்க்கப் படுகின்றன... நம் அண்டை வீட்டுக்காரனோடு நம்மை குஸ்தி போடவைக்கும் அதே காரணந்தான் அரசர்களிடையும் யுத்தத்தை மூட்டுகிறது.

—மான்டெயின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரு

● எனக்குப் பிடித்தபடம் கல்யாணராமன்.

☐ எனக்குப் பிடித்தபடம் இராமன் தேடிய சீதை.



● எதிரிக்கு முட்டை அடிக்கப் போய்விட்டுத் திரும்பி வந்திட்டான்.


☐ ஏன்?

● முட்டைவிலையைக் கேட்டதும் மனம்மாறி விட்டது.




● விசர்நாய் வருகிறது. கல்லைக் காணோம்.

☐ அந்தக்கடையில் போண்டா இருக்கிறது. எடுத்து எறியுங்கள்.



ஒருத்தி: உன் கணவர் எந்தநேரமும் எரிந்து விழுகிறார்.

மற்றவள்: அவர் தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்கிறவர் அதுதான்.



கணவன்: எனக்குக் கடற்கரை என்றால் விருப்பம்.

மனைவி: எனக்குச் சாறிக்கரை என்றால் விருப்பம்.



மனைவி; திருவிழா வருகுது சுவாமிக்கு வடைமாலை போட வேண்டும்.

கணவன்; வேண்டாம் காசுமாலை போடுவது இலாபகரமானது

☐ ☐

● நீங்கள் எழுதி அனுப்பித் திரும்பி வந்தகதைக்கு என்ன பெயர்.

☐ 'சுவரில் எறிந்த பந்து'

☐ ☐

பொலிஸ்காரன்: என்ன வேகத்தில் காரை ஓட்டினாய்?

ட்றைவர்: விலைவாசி வேகம்.

☐ ☐

● என்ன செத்தல் மிளகாய் போல வாடி விட்டீர்கள்.

தோட்டக்காரன்; செத்தல் மிளகாய்க்கு விலை இறங்கிவிட்டது என்ற கவலைதான்.

—கேசரி

## ● தகவம் சிறுகதை வளர்ச்சிப்பணி

தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்), இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளிலே, 1980-ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில் வெளிவந்த சிறுகதைகளை மதிப்பீடு செய்து திரு. ஏ. எல். எம். மன்சூர் அவர்கள் புனைந்த 'முக்காடுகள் மீட்டும் முகாரி ராகங்கள்' என்னும் சிறுகதையைச் சிறந்தது எனத் தேர்ந்தெடுத்துள்ளது. இக்கதை 'வீரகேசரி' (10-2-80) இதழில் பிரசுரமாகியிருக்கிறது.

திரு ஏ. எல். எம் மன்சூர் மேற்குறிப்பிட்ட சிறுகதையைப் புனைந்தமைக்காக, தகவம் வழங்கும் இருபத்தைந்து ரூபாய் பரிசையும், பாராட்டையும் பெறுகிறார்.

தகவம் மதிப்பீட்டில் பாராட்டுப் பெறும் சிறுகதைகளின் விபரங்கள்;

'கொடுத்தல்' சுதாராஜ்
சிரித்திரன் ஜனவரி 80 இதழ்
'பாவம் வாத்தியார்' தெணியான்
வீரகேசரி 6-1-80 இதழ்

அனைவருக்கும் சிரித்திரனின் வாழ்த்துக்கள்.

தகவத்தின இலக்கியப்பணி சிறப்புற சிரித்திரனின் நல்லாசிகள்.

எல்லாப் பண்புகளும் ஒருவரிடமே குடிகொண்டிருக்கும் என்று சொல்ல முடியாது.

என்னிடமுள்ள மிகச்சிறந்த நற்பண்பில் கூட ஏதோ கொஞ்சம் பாவத்தின் சாயம் ஒட்டிக் கொண்டிருப்பதைக் காண்கிறேன்.

—மாண்டெயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படிப்பாடினரோ

# வைரவரிகள்...

## துளிகள்

வேர்வைசிந்தவேண்டியநேரத்தில்
கண்ணீர் சிந்துவது
சோம்பேறிகளின் வேலை
கண்ணீர் என்பதே
சோம்பேறியின் வேர்வைதான்.

நா. காமராசன்

## மழைப்பூக்கள்

ஈரச்சுவாசம்
நுரையீரல்களின்
உட்சுவர்களில்
அமுதம் பூசியது
ஆயினும் — நான்
என் பெருமூச்சில்
குளிர் காய்ந்துகொண்டிருந்தேன்

வைரமுத்து

## பதவி

கிடைக்கும் வரை
மியூஸிக்கல் சேர்
கிடைத்து விட்டதும்
ஈஸிசேர்

ஸ்ரீ. ஸ்ரீதரன்

## பிரிவு

இழுத்து மூடிய
தியாகப் போர்வையுள்
இயலாமை பதுங்கும்
நீளும் மௌன இருளில்
அன்பின் தடம் மறையும்.

அ. யேசுராசா

## எதிர்காலம்

கண்ணீர் உப்பிட்டு
காவேரி நீரிட்டு
கலயங்கள் ஆடுது சோறின்றி
இதயங்கள் ஏங்குது
வாழ்வின்றி...

## முரண்பாடுகள்

பொன்னகை அணிந்த
மாளிகைகள்
புன்னகை மறந்த
மண்குடிசை
பசிவர அங்கே
மாத்திரைகள்
பட்டினியால் இங்கு
யாத்திரைகள்...

கண்ணதாசன்

## இடையூறு

சனவிற்கும்
தினவிற்கும்
இடையில்
அரவு
புகுந்ததால்
சாதி ஆனது.

வர்மன்

## ஆத்மதீபம்

சுடலை காப்போனின் மனைவி இறந்துவிட்டாள்.
அடுக்கப்பட்ட சிதைக்கு தீ மூட்டிவிட்டு வந்து சுடலையை யொட்டியிருந்த குடிசை வாசலில் கலங்கியபடி இருந்தான் அவன்—
இருளின் ஆளுகையில் சுவாலை விட்டு எரியும் சிதையில் அவன் மனமும் இணைந்து கொண்டிருந்தது.
குடிசைக்குள் விளக்கேற்ற நெருப்புப் பெட்டியைத் தேடினாள் அவன் மகள்.
கிடைக்கவில்லை—
பார்த்துக் கொண்டிருந்த அவளின் கடைசித்தம்பி விளக்கை எடுத்துச்சென்று எரிந்து கொண்டிருக்கும் தாயின் சிதையில் அதனை ஏற்றிவந்து வைத்தான்—
மகனின் செய்கையை அதிர்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்த தந்தைக்கு அந்தச் சுடரின் இறந்துபோன அவளின் முகம் ஜ்வலித்தது.

## கல்(வி)அறிவு

அவன் - குருடன்
பிச்சை யெடுத்தே ஜீவனம்
வீதியோரத்து வாழ்க்கை
அவன் முன்னிருக்கும் தகரக்குவளையில்
சில்லறைகள் விழும்
சில்லறைப்புத்தி கொண்ட சிலர் கற்களையும்போடுவர்
ஒருநாள் கேட்டேன் 'உனக்கு கற்களைப் பிச்சையாகப் போடுபவர்களை நீ ஏன் திட்டுவதில்லை'
அவன் சொன்னான்
''நான் அவர்களுக்காக இரக்கப்படுகிறேன். எனக்கு பார்வை மட்டும்தான் இல்லை. அவர்களுக்கு பார்வை இருந்தும் இதற்குள்போடவேண்டியது பணமா...கல்லா என்று யோசித்துப் பார்க்கும் அறிவுமல்லவா இல்லாமல் போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வோட்டம்

வாழ்க்கை என்றால் என்ன என்று கேட்டான் ஒருவன் வாழ்க்கை ஒரு 'பொழுதுபோக்கு' என்றான் ஒரு உல்லாசி.

வாழ்க்கை ஒரு 'மாயை' என்றான் துறவி

அதுஒரு 'சூதாட்டம்' என்றான் சூதாடி

வாழ்க்கையா?... அது ஒரு கனவு என்றுவிட்டு தூங்க ஆரம்பித்தான் சோம்பேறி.

'மரணத்தை நோக்கிச் செல்லும் ஒருவழிப்பாதை' என்றான் தத்துவஞானி.

இறுதியாக பதில் சொன்ன தொழிலாளி... "உனக்கு வேறு வேலையில்லையா... போய் உழைத்து உண்டு உடுத்து, உறங்கி வாழ்ந்து பார் புரியும் என்றுவிட்டு தன் தொழிலைத் தொடர்ந்தான்.

'ரத்ன'

## திருக்காட்சி



● எனக்கு நாஸ்திகர்களைப் பிடிக்காது!

□ உன்னைப் போல் கோயில் ஓடி ஓடிக் கும்பிடுபவருக்கு எப்படிப் பிடிக்கும்.

● போடி மண்டு......
எங்கள் நகைகளை நெக்லெஸை வேறெங்கு காட்டுவது.

ஜோக்கிரட்டீஸ்



குயில்

● அமரர் அழகு சுப்பிரமணியம் அவர்கள் தமிழராகியபோதும், ஆங்கிலத்திலேயே தமது கதைகள் முழுவதையும் எழுதினார். அவர் மொழிபற்றிக் கூறிய ஒருகருத்து சிந்தனைக் குகந்தது. 'தாய்மொழி என்பது ஒன்றில்லை' என்னும் தலைப்புடன் கீழ் வரும் அக்கருத்து தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவந்தது. 'தாய்மொழி என்று பேசுவதில் அர்த்தமில்லை. ஒருவர் பிறக்கும் போதே அம்மாதிரி ஒருமொழியோடு பிறப்பதில்லை. அது சுவீகரித்துக் கொள்ளப்படும் ஒரு மொழியாகும். சிங்கள ஆயாமார் மூலம் வளர்க்கப்பட்ட தமிழ்ப் பிள்ளைகள் முதல், சிங்களத்திலேயே நினைக்கப் பேசத் தொடங்குகின்றன. இங்கிலாந்தில் நெடுங் காலம் தங்கிய இலங்கையரும் ஆங்கிலத்திலேயே சிந்திக்கத் தொடங்குகின்றனர்."

● குறும்பா

### சாட்டை

கூரைமுழு தும்நிறைய ஓட்டை
வறுமையிலே வறுபடுவோர் கோட்டை
பாரைமிகு பக்குவமாய்
ஆக்கியமர் இந்நிலையில்
புரளுவதோ நீயெடுப்பாய் சாட்டை

க. கலாமோகன்

● அலையெறிந்த கடல் அமைதியாகி, அதன் கரையிலே பிணமொன்று ஒதுங்கிக் கிடந்தது. கரையிறங்கிய மீனவர் கண்வழி அது படவே, அருகில் ஓடினர்.

அரும்பல்நாடி, கசங்கல் உடை. துயரக்கோடுகளோடு கிடந்த பிணத்தைப் புரட்டியபோது, அதன் பொக்கெற்றில் இருந்து ஒரு புத்தகம் விழுந்தது. அது ஒரு இலக்கியப் பெட்டகம்.

சில விநாடிகளில் அவர்கள் புரிந்து கொண்டனர் அவனே கவிஞன் ஷெல்லி என்று.

ஒருவர்: ரொம்ப செல்வாக்கா இருக்கிறியயே! சுவீப் ஏதும் முதல்பரிசு கிடைச்சுதா?

நோ வைத்தியர்: இந்த மோட்டார் சைக்கிள் இறக்குமதிக்குப்பிறகு அதிஸ்டம்தான்.

—அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- அமைதி நிறைந்த அடிமைத்தனத்தைவிட ஆபத்துடன் கூடிய சுதந்திரமே மேலானது.
—ரூஸோ

- சுதந்திரத்தை புதியதாகச் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனால் இழந்த சுதந்திரத்தை மீட்பது அரிது.
—ரூஸோ

- தன்னால் இயன்றதைச் செய்யவேண்டி முயல்பவனும் தன் மனச்சாட்சியின் பிரகாரம் காரியங்களைச் செய்பவனுமே உண்மையான சுதந்திர புருஷனாவான்.
—ரூஸோ

- மனிதனிடமுள்ள கெட்ட எண்ணங்களைப் பிளப்பதைவிட அணுவைப் பிளப்பது சுலபம்.
—ஐன்ஸ்டீன்

- பொறுத்திருப்பதன் மூலம் எந்தக் காரியத்தையும் சாதித்துவிடலாம், தண்ணீரைக் கூட ஒரு சல்லடையில் எடுத்துச் செல்லமுடியும், அது உறையும் வரை பொறுத்திருக்கவேண்டும் அவ்வளவுதான்.
—யாரோ


தொகுப்பு: ஸ்ரீவாணி



- ரேப்:
  சொன்னதைச் சொல்லும் நா(டா)
- வேலைக்காரன்;
  பின் தூங்கி முன் எழும் உறக்கமில்லா ஊழியன்
- முகில்:
  மழைசுரக்கும் மேகப்பசு.
- நித்திரை:
  கனவுக் காட்சிகாணும் திரை.
- எலி:
  ஜீரணிக்க முடியாத புத்தகங்களையெல்லாம் ஜீரணிக்கும் ரஸிகன்.
- ஆமைப்பூட்டு:
  மனிதனால் மனிதன் மீது நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் சின்னம்
- அலை;
  பூமாதேவியை வெண்திரை மலர்களால் அர்ச்சிக்கும் பக்தை.

## நிமிரமுயலும் கேள்விக்குறிகள்...

மேசையிலே துயிலுகின்ற ஆசிரியர்
செய்த கணக்கை நான் காட்டப்
போனபோது சீறினார்
மது வெறியில் மயங்கி நின்ற
பரீட்சகர் அலட்சியமாய்
என் விடைத்தாள் திருத்தினார்
ஆனாலும் நான் 'பாஸ்' பண்ணி
உத்தியோகத்திற் கலந்து:
கூனி, குறுகி, வளைந்து
வீழ்ந்து வணங்கி,
நிமிர்ந்து எழுந்த போதும்
எனக்கில்லை 'வேலை என்றார்கள்
துன்ப நினைவுகளும் சோர்வும்
பயமுமெல்லாம் அன்பில் அழியுமடி"
என்றுரைத்தான் பாரதி அன்று
அன்பின் விலைகேட்டு
அலைகின்றேன் தெருவழியே இன்று
என்றாலும்
என்றோ நான் வாழ்வேன் என்று
நம்பிக்கை இன்னும் ஏனோ
சாக மறுக்கின்றது.



பொ. தயாபரன்

- உன்னை எந்நேரமும் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டுமென்பதற்காகவே ஜேர்மனி எல்லையிலே திரும்பி வந்திட்டேன்.

- உங்கள் காதலை ஜேர்மனியர் அறிந்துதான் உங்களை ஜேர்மனிக்குள் அனுமதிக்கவில்லை அப்படித் தானே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● நாடகவிமர்சனம்

# உறவுகள்

மேடையில் தோன்றும் ஒவ்வொரு உருவமும் தனது தனிப்பட்ட ஆற்றல்களை வெளிப்படுத்தி முன்னேயிருக்கும் இரசிகர்களுக்கு செய்தியைக் கூறவல்லது''

நாடகத்தின் இந்த அடிப்படை நோக்கத்திற்கு உயிரூட்டியிருக்கிறது 'குழந்தை'யின் 'உறவுகள்' நாடகம். கதையைப் பொறுத்த வரை கற்பனை உலகிற்குப் போக வேண்டியதில்லை கதையில், உரையாடலில் நடிப்பில்... யதார்த்தம் இழையோடுகின்றது. குறிப்பாக வசனங்கள் கதையின் கருவுக்கு அழுத்தம், கொடுக்கும் வகையில் இறுக்கமாக இதமாக, சுருக்கமாக அமைந்திருந்தது,

ஆபாசச் சிலேடை தான் நகைச்சுவை என்று எண்ணும் கையாலாகாத நாடகாசிரியர்களுக்கு சிலேடைத்தமிழிலும் சிரிக்க வைத்துச் சிந்திக்கத் தூண்டலாம் என்பதற்கு உறவுகள் ஒரு உதாரணம்.

'...சுந்தரராசாவுக்கு டாக்டராகப் படிக்க வாய்ப்பில்லாமல் போனது காலநேரப்பிழையல்ல... பிரதேசப்பிழை...'

...உங்கட தமிழ் உங்களுக்கு விழங்காததற்கு நானேபாடு?...

'...உறவுகள் இரத்தத்தாலல்ல... சித்தத்தால்...'

இப்படி சாதாரண ரசிகனை சிந்தனையாளனாக மாற்றும் வசனங்கள் நாடகம் பூராவும் நிறைந்து விளங்கியது.

பெற்றோரின் பணத்தாசைக்குப் பலியாகி இதயத்தால் ஒருவனோடு வாழ்ந்துகொண்டு, கட்டிய கணவனோடு முகத்துக்கஞ்சி விபசாரம் செய்துகொண்டிருக்கும் பரிதாபத்திற்குரிய பெண் குலத்தின் மீது அனுதாபத்தை ஏற்படுத்திவிட்டு இந்நிலைமாற பெண்ணினம்தான் தீர்மானம் எடுக்கவேண்டும் என்ற முடிவோடு பெண்ணினத்தின் பிரதிநிதியாக 'நான் முகத்துக்கஞ்சி எதுவும் செய்யமாட்டேன்' என்று சூளுரைக்கவைத்த கௌரியைப் படைத்த ஆசிரியருக்கு ஒரு சபாஷ்.

கதையின் உயிர்நாடியான வேலுப்பிள்ளையாக மேடையில் தோன்றிய கே. எம் சண்முகலிங்கத்தின் நடிப்பு புஷ்டியானது.

கதாநாயகன் சுந்தரராசா ஆசிரியக் கலாசாலைக்குப்போகும்போது நீளக்காற்சட்டை போட்டு அழகாகப் போகிறார், ஆனால்காலில் ஒருசெருப்புக்கூட இல்லாமல் போவதும்...சில இடங்களில் வலிந்து நடிப்பை வரவழைக்க செயற்கையாக முயல்வதும்... முதல் காட்சியில் தோன்றியஅதேஉடைகளுடன் கனகமும், கௌரியும் 8 மாதத்திற்குப் பிறகும் தோன்றுவது... முக்கிய வசனங்கள் நடந்து கொண்டிருக்கையில் பின்னனி இசை அலறுவதும்... ஒலிவாங்கிக்கு கட்டுப்படாத நடிகர்கள் ஒளி வட்டத்துக்குக் கட்டுப்படுவது... போன்றவை சிறுசிறு குறைகள்.

ஆனால் ஒரே 'செட்டில்(Set) இரண்டே காட்சியில் இரண்டு மணித்தியாலத்தில் ஏழே பாத்திரங்களைக் கொண்டு படைத்த இந்நாடகத்தில் குறைகளை மீறி நிறைகளே நிறைந்துள்ளதால் விமர்சன நோக்கு இல்லாத ஒரு சாதாரண ரசிகனுக்கு 'உறவுகள்' புரதச்சத்துகள் நிறைந்த சுவையான விருந்து.

— நாவண்ணன்


அழகுக் சலைக்கோலம் தரும்
அற்புதப் புடவைத் தினிசுகளுக்கு
ஒப்பற்ற இடம்
சிங்காரம்ஸ்

நங்கையர் நாடும் நவநாகரீக நகைகளுக்கு
டைமா நகைமாளிகை
செட்டியார் தெரு,
கொழும்பு.
தொலைபேசி; 20875.

நூலுலகில் ஒரு காவிய நூல்
அழகை ஆராதனை செய்பவர்கள்
தமது சித்திரத் தையல்வேலைகட்குப் பாவிப்பது
முயல் மார்க் நூலே
தயாரிப்பாளர்கள்
சம்பியன் திரெட்
மனுபக்சரிங் கம்பனி.
கொழும்பு: 12




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சிறுகதை

# மந்திரத்து மானிடங்கள்

வடகோவை வரதராஜன்

அவர்கள் அந்தச் சிறுதுண்டுக் காணியைத் துப்பரவாக்கி முடியும்போது இரவு எட்டுமணிக்கு மேலாகிவிட்டது. முழுமதி மறுநாளாகையால் நிலவொளி அவர்களை இந்த இரவிலும் வேலையைத் தொடரக்கூடிய துணிவை அளித்தது. வெட்டிச் சாய்க்கப்பட்ட மஞ்சவண்ணா மரங்களும், நாயுண்ணிப்பற்றைகளும் ஓரிடத்தில் குவியலாகக் குவிக்கப்பட்டிருந்தன. அந்தக்கல்லுக் கும்பியில் ஏறி உட்கார்ந்து கொண்டான் சிறுவன்.

மர இலைகளும், தூசியும் கொட்டியிருந்த தலைப்பாகையை அவிழ்த்து உதறினான் மாணிக்கம் தலைப்பாகையின் பெரும்பகுதி வியர்வையில் நனைந்துபிசுக்கொட்டியது. அந்தப்பிசுக்கொட்டும் துண்டாலேயே முகத்தையும் உடம்பையும் அழுந்தத்துடைத்தபடி தாங்கள் துப்பரவாக்கிய வளவை ஓர்முறை கண்குளிரப் பார்த்தான் மாணிக்கம்.

எப்பிடியும் நாளைக்கு நாள்கால் நட்டுப்போடலாம் நாளைக்கு நல்லநாள் எண்டு சுப்பையாச் சாத்திரி சொன்னவர். நாளைக்கு கப்பை நட்டுப்போட்டா பேந்தென்ன கடகடவெண்டு மண்ணைக் குழைச்சுப் பூசுறதும் மேயிறதும் தானேவேலை. எப்பிடிப் பாத்தாலும் இன்னும் ஒரு கிழமைக்குள்ளை இஞ்சை வந்திடலாம் —அவன் மனசு ஆசைக்குகுடிசை கட்டிக் கொண்டிருந்தது.

ஓர் மூலையில் மாணிக்கத்தின் மனைவி பரிமளம் கற்களைப் பொறுக்கி ஓரிடத்தில் குவித்துக் கொண்டிருக்கிறாள். எல்லார் உள்ளத்திலும் அதே பரபரப்பு. நாளைக்கு நாள்கால் நட்டுப்போட வேணும். இன்னும் ஒருகிழமைக்குள்ளை எப்படி யெண்டாலும் இஞ்சை வந்திடவேண்டும். இந்த பரபரப்பு தந்த உற்சாகம் அவர்களின் வேலைப்பளுவையும் களைப்பையும் கனமான அளவிற்கு குறைத்திருந்தது.

'பொற்கொடிகூட' வரப்போகும் குடிசையை எப்படி எப்படி அழகு படுத்தலாம் முற்றத்தில் என்னென்ன' செடிகள் நாட்டலாம் என்று பெண்மைக்கேவுரிய கற்பனையில் மனத்தை அலைபாய விட்டிருந்தாள். பெண்மையே கற்பனையில்தானே வாழ்கிறது.

ஆவணிக் கலவரத்தோடு இடம்பெயர்ந்த குடும்பமது. வன்னிப் பகுதியின் கடைத்தொங்கலில் மாணிக்கத்திற்கு தபாற்காரன்வேலை. அந்த சொற்பசம்பளத்தை சீராக செலவு செய்ய எண்ணி குடும்பத்துடனே அங்கே குடியமர்ந்தான். கலவரச் சூறை அவர்கள் வீட்டைத் தீ நாக்கால் கருக்கியது. உயிர் தப்பியதே ஆண்டவன் புண்ணியமென்று அகதிகளாக சொந்த இடத்திற்கே திரும்பினர்.

மாணிக்கத்தின் தங்கை மீனாட்சி ஒப்பாரிவைத்து அழுதாள். பொருளிழந்து பொலிவிழந்து வந்த அண்ணனை தன்வீட்டில் வந்து இருக்குமாறு வேண்டினாள் அங்கேயே மாணிக்கத்தின் குடும்பம் முகாமிட்டது. கலவரத்தின் பின்தான் மாணிக்கத்திற்கு எவ்வளையானாலும் தனிவளை வேண்டும் — ஞானோதயம் பிறந்து பரிமளத்தின் சீதனத்துண்டான அந்தப் பற்றைக் காணியில் ஓர் குடிசை போடவேண்டும் என்று அவன் முதலாகச் சிந்திக்க ஆரம்பித்தான். எத்தனை நாளைக்குத் தங்கையுடன்! தங்கமுடியும். உறவு முறிந்து குடும்பம் பிரிவதை விட சந்தோசத்துடனேயே வெளியேற வேண்டும் என்று மாணிக்கம் விரும்பினான். அழுதபடி வந்தவன் அழுதபடி போகாமல் சந்தோஷமாகவே போகவேண்டும் என்பதே அவன் பெருவிருப்பு.

ஆனாலும் வேளைக்கே குடும்பத்தில் புகைச்சல் ஆரம்பித்து விட்டது. மாணிக்கத்தின் கடைசி மகனும் மீனாட்சியின் மகனும் விளையாடும்போது ஏற்பட்ட குழந்தைச்சண்டையை மீனாட்சி தன் தலையில் தூக்கிப்போட்டுக் கொண்டு பழஞ்சீலையாகக் கிழிய ஆரம்பித்தாள். அன்றிலிருந்து இனியும் தாமதிக்கக்கூடாது என்ற முடிவுக்கு மாணிக்கம் வந்துவிட்டான்.

என்ன தமையன் தங்கை பாசமிருந்தாலும் இருவரின் வாயும், வயிறும் வேறுவேறுஎன்ற உண்மை புரியாதவன் அல்ல மாணிக்கம் புகைச்சல் ஆரம்பித்த அன்றே தன் காணிக்கு கதிகால்

---

பிரமுகர் I; ஏனப்பா கட்சிதன் கொள்கைகளைச் செயல் படுத்தாமல் விட்டதாலா வெளியேறினாய்.

பிரமுகர் II: இல்லை, நான் கட்சியில் சேர்ந்த நாளில் இருந்து ஒரு சந்தர்ப்பமும் மேடையில் பேசத்தரவில்லை அதனால் தான்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணவன்: ஏனப்பா நான் எங்கு சென்றாலும் நீ என்பின்னாலேயே சுற்றுகிறாய்.

மனைவி: நன்றிக்கடன்

கணவன்: ! ! ! ?

மனைவி: காதலித்த காலத்தில் நீங்கள் என் பின்னாலே சுற்றவில்லையா? அதற்குத்தான்.

---

போட ஆரம்பித்தான். அண்ணனின் செயல் மீனாட்சிக்கு ஓர் மனவெளிப்பை ஏற்படுத்தினாலும். தான்பேசியதால் தான் அண்ணர் இதுவெல்லாம் செய்கிறார் என்று குறுகுறுத்தாள். தமையனிடம் சமாதானமாகப்பேசி "இப்ப என்னத்திற்கு அவசரப்படுகிறியள் இன்னும் ஒருமாதம்மட்டிலை இருந்திட்டு ஆறுதலாக வீட்டு வேலையைத் தொடங்கிறது தானே" என்றாள். ஆனால் மாணிக்கத்திற்குப் புரியாதா? பாவம் மீனாட்சிதான் என்ன செய்வாள் ஏழ்மையும், வறுமையும் இரத்த பாசத்தைக்கூட ஆட்டிவைக்கும் சக்திபடைத்தனவாக இருக்கின்றனவே.

கல்வீடு என்று சொல்லத்தக்க அந்தக் குச்சு வீட்டிற்குள் இவர்கள் ஐவர், அவர்கள் நால்வர் மொத்தம் ஒன்பது பேர்கள் படுக்கக்கூட இடம் சரியாக் கிடையாத அந்தக்'கல்'வீட்டில் இனியும் தங்குவது உசிதமல்ல. மாணிக்கம் அசுரகதியில் இயங்கினான். புதுவீட்டை விரும்பிய அவனின் குடும்பத்தினரும் முழுமூச்சாய் ஈடுபட்டு அந்த முயல்பற்றையைத் திருத்தி விட்டனர்.

## 2

பரிமளம் எனிக்காணும் வா, மிச்சத்தை நாளைக்குப் பாப்பம். குரக்கன் புட்டு மணம் மணக்குது எங்கையோ புடையன் பாம்பு கொட்டாவி விடுகுது போலை கிடக்கு. காலம்கெட்ட நேரத்திலை உதுகளெல்லாம் சொல்லிக்கொண்டே.'' என்றான். மாணிக்கம் புடையன் பாம்பென்றதும் பொறுக்கிக் கொண்டிருந்த கல்லையும் அப்படியே போட்டுவிட்டு மகளையும் இழுத்துக்கொண்டு ஓடிவந்துவிட்டாள் பரிமளம். அந்தப் பற்றைக்குள் அடித்த முயலொன்றையும் தூக்கிக்கொண்டு அவர்கள் நடக்கலாயினர்.

அன்று அதிகாலையிலேயே மாணிக்கம் குடும்பத்தினர் குளித்துமுழுகி புதுப்பொலிவாய் நின்றனர். எல்லோர் உள்ளத்திலும் புதுவீடுகட்டும் தனியுற்சாகம் பெருமகிழ்ச்சி வெற்றிலைபாக்கு வைத்து சாணிப்பிள்ளையார் பிடித்து ஊதுபத்திகொழுத்தும் அந்த சுபமான வேளையிலே நவதானியங்களும், ஆற்றுகல், புற்றுமண்யானை, இலத்தி என்பன போடப்பட்ட அந்தக்கப்பை மாணிக்கம் பெருமகிழ்ச்சியுடன் நாட்டினான் கப்புநட்ட அன்றும் யந்திரகதியில் வேலைதொடர்ந்தது. 'மளமள'வென்று கிடங்குகளைக்கிண்டி மறுகப்புக்களையும் நாட்டினார்கள் அந்தக் கடுவல் கல்லுத்தரை மாணிக்கத்தின் மகளின் உற்சாகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் அலவாங்குபட்டு நொருங்கியது.

தூண்கள் நாட்டியாய்விட்டது. முகட்டுவளையும் அன்றே ஏறிவிட்டது. எனி அடுத்தநாள் குறுக்கு மரங்களைப் பாச்சுவது தான் பாக்கி. அதைக்கூட நாளை பூரணமாக முடித்துவிடலாம். இத்தனையும் நடந்தபின்பு மாணிக்கத்தின் புதுவீட்டுக் காணிக்கு அடுத்த காணியில் இருக்கும் கடைக்காரச் செல்லத்துரை வந்தார். என்ன மாணிக்கம் வீடு கட்டுறாய் போலகிடக்கு''

''ஓமையா; சின்னக்கொட்டிலாய் ஒண்டு போடுவம் எண்டுதான்' நீ போடுறதிலை ஒண்டுமில்லை மாணிக்கம், ஆனா உந்த வீட்டுக்கு உதுநிலையம் சரியில்லை உன்ரைவீடு உதிலை எழும்பினா, உனக்கும் ஆபத்து எனக்கும் ஆபத்து. அப்படியான நிலையத்திலை உன்ரைவீடு எழும்பியிருக்கு நீ உங்கை கப்பு நடேக்கையே என்ரை மாட்டுக்கொட்டிலுக்கு மேலை தென்னமரமொண்டு விழுந்துபோச்சு. இப்பவே உப்பிடி எண்டால் வீடும் எழும்பினாப் பிறகு என்னமாதிரி இருக்கும்'' செல்லத்துரையர் நேரடியாகவே விடயத்திற்கு வந்துவிட்டார்: அவர் ஆத்திரத்தை அடக்கி நல்ல முறையில் பேசவேணும் என்று நினைப்பது அவரின் வார்த்தைகளில் தெரிகிறது.

செல்லத்துரை அந்த ஊரில் பிரபல்யமான வியாபாரி எப்படிப் பிரபல்யமானார் என்பதுகொச்சையானது. நல்ல சொத்துப்பத்து நிலம் நீச்சு எல்லாம் உண்டு. இருந்தும் என்ன? செல்லாக்காசுச் செல்லத்துரைதான். எச்சிக் கையை நக்கிவிட்டு காகம் கலைக்கிற புண்ணியவான். மந்திர தந்திரங்களிலும் சாஸ்திரங்களிலும் அசைக்க முடியாத நம்பிக்கை. நாள் நேரம் பார்த்துத்தான் காரியங்கள் தொடங்குவார். கடைக்கு


---

டாக்டர்: ஆப்பரேசன் செய்து இருக்கு ஆடாமல் அசையாமல் படுத்திருக்கவேண்டும்.

நோயாளி: பிளீஸ் கொஞ்சம் மூக்குப்பொடி இருந்தால் கொடுங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை: எங்க மகள் ஒழுக்கமான பெண் காதல் கடிதம் எழுதுவதே இல்லை.

தாய்; ஓம்... 'டெலிபோனில் பேசி கொள்வாள்.

தந்தை; ! ! ?

—அதிமதுரம்

---

செல்லும் வழியில் குறுக்கால் சென்ற பூனையைத் திட்டிக் கொண்டு வீடு திரும்பி விடுவார் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். இவரிடம் பணம் கறப்பதற்கு ஏதாவது பழம் பஞ்சாங்கத்துடன் வந்து, சூரியன் அங்கை நிற்கிறான், வியாழன் எட்டிப்பார்கிறான் என்றால்'போதும் ஒன்றோ இரண்டோ பிரட்டலாம் அவ்வளவுதான் அதற்குமேல் கைநீளாது

# 3

சாத்திரி தம்பனுக்கு அன்றைக்கு தவறணைத்தாகம். இந்தப் புதுவீட்டைவைத்து செல்லத்துரையரிடம் காசு கறப்பது அவரின் திட்டம். திட்டப்படி செல்லத்துரையிடம் சென்று இந்த வீட்டால் உமக்கு அபாயம் என்றார். அவர் சொன்னதைப்போல தென்னைமரமொன்று மாட்டுக் கொட்டிலின்மேல் சரிந்தது. செல்லத்துரையருக்கு தம்பன் மீது அசைக்க முடியாத நம்பிக்கை காசுகைமாற தம்பன் தாகம் தீர்த்துக் கொண்டார்.

செல்லத்துரையரின் கதையைக் கேட்டு மாணிக்கம் திடுக்கிட்டாலும் பின் குழைந்தான்? எனக்கு இதுதான் சரியான நிலையமைய்யா, உங்கடை 'சதாப்' பிடிச்ச உயரித்தென்னை இந்தப் பேய்காத்துக்கு விழுந்திருக்கும். அங்காலை தோட்டப்பக்கம் போய் பாருங்கோ, எத்தினை வாழையழையும், தென்னையளையும் காத்துப்பிரட்டித்தள்ளி இருக்கெண்டு. காத்துச்செய்தபிழைக்கு நிலையம் சரியில்லை எண்ணுறியள் என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"இஞ்சைபார் மாணிக்கம். உனக்கு நிலையம்பார்த்தது சுப்பையன்தானே? அவன்ரைவேலை எப்பவும் உப்பிடித்தான். இவ்வளவு நாளும் இல்லாத காத்து இப்ப நீ கப்பு நட்டேக்கை வந்த காரணமென்ன?"

"இதென்ன கதையையா, இந்த மாதத்திலை இப்பிடியொரு காத்து இஞ்சைவாறது வழக்கம் தானே. இந்தமுறை கொஞ்சம் பிலப்பா வீரிப்போட்டுது அவ்வளவுதானே!"

"அதேன் இந்தமுறை பிலப்பா வரவேணும் என்டுதான் கேக்கிறன்" — இதற்கென்ன பதிலைச் சொல்லமுடியும்.

"மாணிக்கம் உனக்கும் எனக்கும் பிரச்சனையள் வரக்கூடாது. நீ புள்ளை குட்டிக்காரன் இந்த வீட்டாலை ரெண்டு பேருக்கும் அழிவுதான். இப்பவேலை யொண்டும் கனக்க முடியேல்லைத்தானே இப்பவே கப்புகளைப் புடுங்கி மாற்றிப் போடுங்கோ" ஏதோ தன்ரை வளவில் வேலைசெய்விக்கிறது போல உத்தரவிட்டார் செல்லத்துரையர்.

"இதென்ன கதைஐயா போட்ட கப்பைத் திரும்பிப்புடுங்கிறதே. இதைவிட்டால் வேற கிழக்கு வாசல் நிலையமே வராது.

"மாணிக்கம் நீ அங்காலை இருந்து கஸ்ரப்பட்டு வந்தனி. பிரச்சனைகள் கூடாது. நீ உந்தக் கப்பு கட்டாயம் மாத்தத்தான் வேணும்" செல்லத்துரையர் பொறுமை இழக்க, குரலில் உஸ்ணம் ஏறியது.

இவ்வளவு நேரமும் இவர்கள் சம்பாசனையை பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த மாணிக்கத்தின் மூத்தமகன் கிடங்கு கிண்டிய அலவாங்குக் கம்பியுடன் வந்தான்.

"ஐய்யா நிலையத்தை மாற்றேலாது இதுதான் எங்களுக்கு நிலையம். கிழக்குவாசல் வீட்டுக்கு இந்தக்காணித்துண்டிலை வேறு நிலையமே இல்லை. எங்கடை வீட்டு நிலையம் உங்கடை வீட்டுக்கு கூடாது எண்ட ஒருகாரணத்திற்காக நான் நேரம்பார்த்து வைச்ச கப்பைப் புடுங்கேலாது ஐயா! உங்களைத்தான் எடுங்கோ குறுக்கு மரங்களை கையோடு பாச்சவும் சும்மா வீண் கதையள்பேசி நேரத்தை மினக்கடுத்தாதெயுங்கோ" இளமை திமிறி முறுகும் அவன் உடலில் இருந்தசெம்மண் புழுதியை வியர்வை கழுவிக் கோலமிட்டுக் கொண்டிருந்தது. அவன் அலவாங்கைப் பிடித்துக் கொண்டு நிற்கும் விதம் எதற்கும் ஆயத்தம் என்பதைப்போல் இருந்தது?

அவன் நிற்கும் நிலையைப் பார்த்திட்டு செல்லத்துரையர் மெல்ல நழுவினார். "எனக்கென்னப்பா, நீங்களே வடிவாய் கொட்டிலைப் போடுங்கோ. உங்கடை நன்மைக்குத்தான் சொன்னனான். நீங்கள் இருந்து பாக்கத்தானே போறியள் உது நீங்களே

---

புலவர் மனைவி; நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்ற தலைப்பில் நீங்கள் பேசிய பேச்சு தேனாக இனித்தது.

புலவர்: நீங்கள் கறிக்குப்போட்ட காரமும் நெஞ்சை அள்ளுதே'

—அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு வெட்டிறகுழி மெதுவாக அவர் பின் வாங்கினுர்.

கைமரங்கள் பாச்சியாய்விட்டது, பக்கச்சுவர்கள் வரவேண்டியஇடங்களில் நாயுண்ணி அலம்பல்களை ஒழுங்காக அடுக்கிக்கட்டி அதன்மேல் மண்ணைக்குழைத்து அழுத்தமாக பூசி சுவர் எழுப்பினுர்கள். அந்த மண்ணின் ஈர வாசனையே ஓர் சுகானுபவமாக இருந்தது. சுவர் எழுப்பிய அன்று நாய்கள் மண்ணைக் கிழருமல் மாணிக்கம் அங்கேயே முற்றத்தில் வாங்கொன்றைப் போட்டுவிட்டு படுத்திருந்தான். வேலை செய்த அலுப்பைத் தீர்க்க 8மணிக்கு முன்பாகவே நித்திராதேவியை இறுகத்தழுவிக் கொண்டாள்.

## 4

இருந்தாற்போல் 'பட், படீர் என்ற வெடிப்பொலி; ஈரமண் வேகும் வாசனை; மண்ணெய் எரியும் கெட்டநெடி: மாணிக்கம் துடித்தெழுந்தான், அதற்கிடையின் அக்கினி அரக்கன அசுர நாக்குகளால் நாலாபுறமும் துளாவிவிட்டான். யாரோ இருவர் தடதட என்று ஓடும் சத்தம். மாணிக்கத்தின் கண் முன்னுலேயே அவன் தேன்காடுபோன்று அணுவணுவா கட்டிய குடிசை எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்தது. □



பேச்சாளர்: பாரதியார்... காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும்... அதில் பத்துப் பன்னிரண்டு எண்ணெய்கிணறு வேண்டுமென்றுபாடியிருக்கலாம்.



# மன்னன் இருந்தால்...

அரசன்: மந்திரியாரே...

மந்திரி: அரசே...

அரசன்: 'ஆலயம் தோறும் ஆறுகாலப் பூஜை தவருது நடைபெறுகின்றதா...?'

மந்திரி: 'அரசே தியேட்டர்கள் தோறும் ஆறு நேரக் காட்சிகள் தவருது நடைபெறுகின்றது.'

அரசன்: 'சபாஷ்... மாதம் மும்மாரி பொழிகின்றதா...?

மந்திரி: 'செயற்கைமழை பொழிய வைக்கும் நிபுணர்கள் மும்மாரி பொழியவைக்க முயற்சி செய்கின்ருர்கள் அரசே...

அரசன்; 'பலே...பலே... பசி, பட்டினியின்றி நம் பிரஜைகள் சந்தோஷமாக வாழ்கின்ருர்களல்லவா?'

மந்திரி; 'காற்றுக்கு கட்டுப்பாட்டு விலை இல்லாததால் வியாபாரிகள் காற்றைப் பதுக்கல் செய்ய முனையவில்லை. ஆகவே நம் பிரஜைகள் காற்றைப்புசித்து பசியின்றி வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள்'

அரசன்: 'மிக்க மகிழ்ச்சி... அப்போ எமது ஆட்சியின் மாட்சி திக்கெட்டும் பரவி புகழ் பரப்பிக்கொண்டிருக்கிறது... அப்படித்தானே மந்திரியாரே...'

மந்திரி: 'ஆமாம் அரசே... ராஜாதி ராஜ ராஜ மார்த்தாண்ட, ராஜ கம்பீர, ராஜ் கோலாகல... மன்னர் மன்னனுக்கு ஜெய்...

'உஜேனி'

# கருணை

எண்ணெயில்லாத விளக்கின் சுடரை இருள் மெல்ல மெல்ல விழுங்கிக் கொண்டிருந்தது.

'சுடர்' கடைசி நேரத்துடிப்பிலும் அசுர முயற்சி செய்து கொண்டிருந்தது.

விளக்கின் முன்னிருந்து படித்துக்கொண்டிருந்த சிறுவன் ஒளிமங்கிவர நிமிர்ந்து பார்த்தான். கூர்ந்து பார்த்தான்.

'பாவம் விளக்கு' வாய் முணுமுணுத்தது.

இருளை முற்ருக விழுங்க விடாமல் கைகளை அசைத்து சுடருக்கு விடைகொடுத்துவிட்டு படுத்துக்கொண்டான்.

கையசைப்பின் காற்று சுடரை அணைத்துக்கொண்டது.

தீபக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயப்பெருமக்களே

உங்கள் பயிர்களுக்கு உரியகவனம் செலுத்த
தோளில் சுமக்கும்
ஹேஸ்ப்றே சிவிறிகளைப் பாவியுங்கள்

இலங்கையில் விவசாயத்திற்கு
மிகபொருத்தமான வகையில்
உருவாக்கப்பட்ட

- 300 P. T.
- 225 P. B.
- ஏர்ஜன்ட்

ஆகிய 'மொடல்'கள்
உங்கள் பாவனைக்கு இப்போது
கிடைக்கின்றன.

- ☐ உறுதியானவை, இயக்குவதற்கு இலகுவானவை. நீண்டகாலப் பாவனைக்குகந்தவை.
- ☐ உதிரிப்பாகங்கள் கையிருப்பில் உண்டு.
- ☐ விற்பனையின்பின் கைதேர்ந்த பராமரிப்பு சேவை...

- தயாரிப்போர்

அக்றோ டெனிக்கா லிமிட்டெட்

- விநியோகஸ்தர்:

ஹேலீஸ் லிமிட்டெட்

25 பொஸ்டர் லேன்
கொழும்பு 10
தொலைபேசி: 96331-6

# சிற்றி பேணிச்சர்

- ☐ கலைத்துவமான
- ☐ நிலையான உறுதிமிக்க
- ☐ விலையில் நேர்த்தியான

கவினுறு தளபாடங்களின்
மனங்கவர் தேர்வுக்கு

உங்கள் இல்லம்
பளிங்குமாளிகையாகத் திகழ

உங்கள் தேவைகளை
திருப்தியுடன் பெற...

## சிற்றி பேணிச்சர்

- கஸ்தூரியார் வீதி
- யாழ்ப்பாணம்.




துரித சலவைக்கும் பளிச்சிடும் வெண்மைக்கும்
சிறந்த
மில்க்வைற் சலவைப் பவுடரை
வாங்கி உபயோகியுங்கள்
மேலுறைகளை அனுப்பி
சிறந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

மில்க்வைற்யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற்கந்தோரில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. பதிவு இலக்கம் பீ இயூ 35/000.



நிருபர்: கலைஞரே காதுக்கு இனியது எது? கண்ணிற்கு இனியது எது?

கலைஞர்: காதுக்கு இனியது ராஜரட்னம்பிள்ளையவர்களின் தோடி. கண்ணிற்கு சிவபாதலிங்கம் அவர்களின் தோடு.


**கலையெழில் கொஞ்சும்**
**கவின்மிகுதங்க, வைர நகைகளை**
**பெற்றுக் கொள்ள**
**நாடுங்கள்**

# செல்லையா சிவபாதலிங்கம்

*(வைரக்கல் — தங்கநகை வியாபாரம்)*

**220 கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி இல: 7794


559, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால், 559, கே. கே. எஸ் வீதியில் உள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org